பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர
14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 04 திங்கட்கிழமை (16.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

# இந்தியாவில் மைத்திரி



## பிரதமர் நரேந்திர மோடியுடன் இன்று சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று மாலை இந்திராகாந்தி விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. தேர்தலுக்குப் பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்தை ஆரம்பித்துள்ள ஜனாதிபதி, இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை இன்று நண்பகல் ஹைதராபாத்தில் சந்திக்கவுள்ளார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த மீண்டும் அரசியலுக்கு வந்தால் சுதந்திரக் கட்சி அழிவடைந்து போகும்

### அவரது காலம் முடிந்து விட்டது – சுஜீவ

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழிந்து போகும் என பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். பிரதியமைச்சர் சுஜீவ மேலும் கூறியதாவது,

வங்குரோத்து அரசியல்வாதிகள் சிலர் தோல்வியை பொறுத்து கொள்ள முடியாது மகிந்தவின் வருகை குறித்து பேசி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் தேர்தலில் போட்டியிட வாய்ப்பை இழக்கும் வங்குரோத்து அரசியல்வாதிகள் சிலரே அந்த கட்சியை அழிக்க போகின்றனர்.

மகிந்தவின் வருகை (இலங்கைக்கு பௌத்த மதத்தை கொண்டு வந்த மகிந்த தேரரின் வருகை) என்பது இலங்கையின் வரலாறு மற்றும் சமயத்துடன் சம்பந்தப்பட்ட வார்த்தை.

அந்த வார்த்தையை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு மன்னர் என்ற பைத்தியம் இன்னும் குணமாகவில்லை என்பது புரிகிறது. இது தற்போது கேலியாகி விட்டது.

மகிந்தவின் வருகை அல்ல, எதனை கூறி வந்தாலும் அவர் செய்த விட 24 ஆம் பக்கம் பார்க்க....

## அகதிகளை மீளக் குடியமர்த்தினால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

### தேசிய சுதந்திர முன்னணி கருத்து

(கொழும்பு)

தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்துள்ள அகதிகளை மீண்டும் வடக்கில் மீளக் குடியமர்த்துவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் மத்திய 'செயற்குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

1970 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து சட்டவிரோத படகுகளில் வந்து குடியேறியவர்களே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை வலுப்படுத்தினர்.

இன்று மீண்டும் இந்தியாவிலிருந்து சிலரை குடியமர்த்துவதால் தேசிய பாதுகாப்பு பாரிய அச்சுறுத் தலை எதிர்நோக்கும். ஒவ்வொரு நாட்டிலும் வெளிநாட்டவர்கள் உள்நுழைய முடியாத தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பிரதேசங்கள் உள்ளன.

தற்போது வெளிநாட்டு ஒற்றர்கள எல்லா இடங்களுக்கும் செல்லக் கூடிய வகையிலும், கெலம் மெக்ரே திரைப்படம் 24 ஆம் பக்கம் பார்க்க....

## விஜயகலாவிற்கு கொலை அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தொலைபேசி அழைப்பு மூலம் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாண பொலிஸ்நிலையத்தில் நேற்று முன் தினமிரவு 11.00 மணிக்கு முறைபாடு செய்துள்ளதாக யாழ்பபாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநாமதேய அழைப்பு ஒன்றின் தனக்கு இந்த கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் வசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)

## ஆணைக்குழு ஆலோசகர்களுக்கு பணிகள் இன்றி நிதி கொடுப்பனவு

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு பல மில்லியன் ரூபாய்கள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளன.

பிரித்தானியாவை சேர்ந்த சேர் டெஸ்மன்ட் டி சில்வா, சேர் ஜியோப்ரி நைஸ், ரொட்னி டிக்சன் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் எம்க்ரேன் ஆகியோர் இந்த ஆலோசனைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நான்கு பேருக்கும் அவர்கள் நியமனம் பெற்று 7 மாதங்களுக்குள் 135 மில்லியன் ரூபாய்கள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்த கொடுப்பனவு அமைச்சரவையின் அனுமதியில்லாமல் நேரடியாக மத்திய வங்கியினால் செலுத தப்பட்டுள்ளன.

எனினும் இந்த நால்வரில் இருவரை மாத்திரமே தாம் சந்தித்துள்ளதாக காணாமல் போனோர் தொடர்பான 24 ஆம் பக்கம் பார்க்க....

## வெள்ளை வானில் வந்தோரால் இளம் பெண் கடத்தப்பட்டார்

### சினிமா பாணியில் யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலையத்திற்கு சென்ற 19 வயதுடைய இளம் பெண்ணை யாழ் நகரில் வைத்து வெள்ளை வானில் சினிமாப் பாணியில் இளைஞர்கள் கடத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தினால் யாழ் நகரில் பெரும் பதற்றம் நிலவியதோடு கடத்தியவர்கள் யாரென தெரியாததனால் அச்சமும் நிலவியிருந்தது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கிளிநொச்சி பூநகரியைச் சேர்ந்த பிரஸ்தாப பெண் மணிக்கூடு கோபுர வீதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது மணிக்கூட்டுக் கோபுர வீதிவழியாக பெண்ணின் பின்புறமாக வந்த வெள்ளை நிற ஹயஸ் வான் குறித்த பெண்ணருகே சென் 24 ஆம் பக்கம் பார்க்க....

## நல்லிணக்க முயற்சிகளை ஆராய தென்னாபிரிக்க குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவுவது குறித்து ஆராய்வதற்காக தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை தென்னாபிரிக்க ஜனாதிபதியின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி சிறில் ரமபோசவும் இலங்கை வரவுள்ளார்.

தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பிற்கான பிரதியமைச்சர் நொமைன்டியா பெகெட்டோ தலைமையிலான குழுவினர் இம்மாதம் 24-ம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொளள வுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு எவ்வாறு உதவுவென்பது குறித்து அவர்கள் அரசாங்க அதிகாரிகளுடன் ஆராயவுள்ளனர்.

இக்குழுவினரின் விஜயத்தை உறுதிப்படுத்தியுள்ள தென்னாபிரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராகிம் இஸ்மாயில் இப்ராகிம் தங்களது குழுவினரின் விஜயத்தின் பின்னர் தென்னாபிரிக்க ஜனாதி 24 ஆம் பக்கம் பார்க்க....

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

சுயாதீன தேர்தல்க்ள் ஆணைக குழுவை நியமிப்பது தொடர்பான அறிக்கை ஒன்று எதிர்வரும் ஒரு வார காலப்பகுதியில் தாக்கல் செய்யப்படவுள்ளது என பெ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கடந்ததினம் தேர்தல் ஆணையாளர் தலைமையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது 17-ம் திருத்தச் சட்டத்தின் 24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய நீருக்காக பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியம் உதயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள கிணறுகளில் ஏற்பட்டுள்ள கழிவு எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தூய நீரை வழங்குவதற்காக, பாதிக்கப்பட்ட மக்களை இணைத்த மற்றுமொரு தூய நீருக்கான அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்புக்கான தெரிவுக்குழு கூட்டம் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் மண்டபத்தில் வைத்திய கலாநிதி ந.சிவசங்கர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலின்போதே மக்கள் தமது குடி நீர் பிரச்சினைக்கு உறுதுணையாக புதிய ஒன்றியம் ஒன்றினை உருவாக்கி உள்ளனர்.

இதனூடே இனிவரும் காலங்களில் உத்வேகமான செயற்பாடுகளை முன்னெடுக்க அவர்கள் முடிவும் செய்துள்ளார்கள். இதன்படி இவ் ஒன்றியத்தின் உறுப்பினர் விபரம் வருமாறு,

தலைவர்- ந.நந்தரூபன் (பொறியியலாளர்), உபதலைவர்-ச.தசிந்தன் (யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்), செயலாளர்- சிவமைந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), உபசெயலாளர்:-ந.தவசோதிநாதன்(ஆசிரியர்), பொருளாளர்:-சி.லகிந்தன், ஊடக இணைப்பளர்:-இ.றமேஸ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அத்துடன் ஒவ்வொரு பிரதேசத்தினையும பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பல அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் அங்கு கூடிய மக்களின் வேண்டுகோளிற்கு இணங்க வைத்திய கலாநிதி சிவசங்கர் இவ் ஒன்றியத்தின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் வைத்திய கலாநிதி சிவசங்கர் உரையாற்றுகையில், கடந்த 8 மாதங்களாக சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு எண்ணெயால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் நிலையில், இதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அனைத்து மக்களினதும் பங்களிப்பு இருக்க வேண்டியது அவசியமாகும்.

நாம் அனைவரும் இணைந்து இதுவரை சுன்னாகம் பிரதேசத்தை மட்டும் கொண்டு இயங்கிய அமைப்பை, விரிவுபடுத்தி அதிகளவான பிரதேச மக்களையும் உள்வாங்கிய புதிய அமைப்பாக இயங்கவேண்டும். வெகு விரைவில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் பாதிப்புகளுக்கான நிவாரணம் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் அவசியமும் கூட காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள என்ற வகையில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்த அரசியலை கடந்து தூயமனதுடன் மக்களின் பாதிப்புக்களைக் களைய அனைவரும் இணைய வேண்டும் என்றார். (செ)

## இலங்கை மீனவர்களும் படகுகளும் விடுவிப்பு

இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயத்தை முன்னிட்டே இந்திய அரசால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி இராஜாங்க அமைச்சர் துலிப்வெதே ஆராச்சி தெரிவித்துள்ளார்.

ஆறு மீனவர்களும் 24 படகுகளுமே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையால் கைப்பற்றப்பட்ட அனைத்து இந்திய மீனவப் படகுகளையும் விடுவிக்க, அரசாங்கம் அண்மையில் நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.(செ)

# முன்னாள் அமைச்சர்களுக்கும் உத்தியோகபூர்வ வாகனங்கள்

## அமைச்சரவை வழங்க தீர்மானம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன் கடிதம் மூலம் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை பலன் தரும் வகையில் துரிதமாக செயற்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதுடன், அந்த வேலைத்திட்டத்தை கண்காணிக்க உதவ விரும்பும் முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வாகனங்கள் வழங்கப்படும்.

இதனடிப்படையில் முன்னாள் அமைச்சர்களுக்கு தலா இரண்டு வாகனங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா ஒரு வாகனமும் வழங்கப்படும்.

சாரதிகள், வாகனங்களுக்கான எரிபொருள வழங்கப்பட்டு, கண்காணிக்கும் அமைச்சின் பணிகள் பகிரப்படும்.

இதனடிப்படையில், பொருளாதார அமைச்சினால் முன்னைய அரசாங்கத்தினால், எவருக்காவது வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தால், அந்த வாகனம் இந்த புதிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதாக கருதப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரின் கடிதத்திற்கு அமைய பிரதியமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் எரிபொருள் தொகை கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட வேண்டும்.

மேலும் ஊடகத்துறை மற்றும்நாடாளுமன்ற விவகார அமைச்சுக்களினாலும் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட உள்ளன. (செ)

# ஹைபிரைட் வாகன விலைகளை குறைக்கும் யோசனை ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் ஹைபிரைட் ரக வாகனங்களின் விலைகளை குறைக்கும் யோசனை தொடர்பில் தேசிய நிறைவேற்று சபை ஆராயவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை இந்த யோசனை ஆராயப்படவுள்ளாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதியாளர்கள் பலர் நேற்று முன்தினம் அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துரைத்தனர்.

இதன்போது ஹைபிரைட் வாகனங்களின் விலைகளை குறைத்தல் மற்றும் வருடாந்த அனுமதி கட்டணங்களை குறைத்தல் போன்ற யோசனைகளை இறக்குமதியாளர்கள் முன்வைத்தனர்.

இதன்போது கருத்துரைத்த அனுரகுமார,

வாகனங்களின் இறக்குமதி வரிகளை அதிகரித்தல் மற்றும் வருடாந்த அனுமதி பத்திரக் கட்டணங்களை அதிகரித்தல் என்பன முன்னர் கொள்வனவில் சந்தை கட்டுப்பாட்டை சிலர் கொண்டிருந்தமை போன்ற நிலையை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார். (செ)

# மரண அறிவித்தல்

## அந்தோனி இராயப்பு

தோற்றம் 20 - 03 - 1943



மறைவு 15 - 02 - 2015

நல்லாயன் வீதி இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி இராயப்பு நேற்று (2015.02.15) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி-சலோமை தம்பதியினரின் அன்பு மகனும், பர்னாந்து-சூசானம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விக்டோரியாவின் அன்புக் கணவரும், சேவியர், ஆனந்தன் (கட்டிட ஒப்பந்தகாரர்), திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மஞ்சுளா, மோகன், வசந்தா, செல்வராஜா, தேவராஜா (இ.போ.ச ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயன், பிரின்ஸ், குயினா, டயானா, நிலானி ஆகியோரின் அன்பு மாமனாரும், தில்க்கா, திலக், தினுஜன், கெவின்ஸ், எலாசா, கிறிஸ் செயில் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவரார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.02.2015) திங்கட்கிழமை மாலை 3.30 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:ஆனந்தன் குடும்பத்தினர்
(கட்டட ஒப்பந்தகாரர்)

நல்லாயன் வீதி, இளவாலை.
தொ.பே:-0778893323, 0769611147 (9535)

# மரண அறிவித்தல்

## அமரர் நாகலிங்கம் (அப்பாமணி-மெக்கானிக்) மீனாட்சி



அராலியை பிறப்பிடமாகவும், கன்னாதிட்டி காளி கோவிலடியை வசிப்பிடமாகவும், நல்லூர் சங்கிலியன் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் (அப்பாமணி-மெக்கானிக்) மீனாட்சி நேற்று (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஆறுமுகம் -ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகலிங்கம் (அப்பாமணி) அவர்களின் பாசமிகு மனைவியும், இராசம்மா, நாகம்மா, லெட்சுமணன் ஆச்சாரி, சுப்பிரமணிய ஆச்சாரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஞானம்பாள் மற்றும் நடராசா, நாகரெத்தினம், சந்தானலெட்சுமி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் காமாட்சி, சிவகுமாரன், சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான கண்ணாம்பாள், ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் செல்வரோகிணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் கமலாம்பாள், காலஞ்சென்ற அண்ணாமலை மற்றும் மகாலிங்கம், மகேஸ்வரி, கலாவதி, விஜயலெட்சுமி, காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2015) திங்கட்கிழமை மாலை 3 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

31/9 சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
0778171631, 0776341221 (சி-132)

தகவல்:மகன்
(சிவகுமாரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய குடிநீருக்கான உரிமையை வலியுறுத்தி தலைநகரில் போராட்டம்









தூய குடிநீருக்கான உரிமையை வலியுறுத்தி நேற்று கொழும்பு - வெள்ளவத்தையில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சமூக நலனுக்காக ஒருங்கிணைந்த இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டமானது. நேற்றுக் காலை 9 மணிமுதல் 11.00 மணிவரை நடைபெற்றது. யாழ். சுன்னாகம் பகுதியில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டு அது தொடர்பில் தற்போது மல்லாகம் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்று வருகிறன.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் நொதேர்ன் பவர் எனும் தனியார் மின்னுற்பத்தி நிறுவனத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக கருதப்படும் குடிநீரில் மாசு ஏற்பட்டதையடுத்து, இதனை சுத்தப்படுத்தித் தருமாறு யாழில் பல ஆர்ப்பாட்டங்களும் கவனயீர்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வந்த வண்ணமுள்ளன. இந்நிலையில் யாழ் மக்களின் போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையில் தலைநகரில் நேற்று தமிழர்கள் யாவரும் ஒன்றிணைந்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரதமர் வேட்பாளரை ஜனாதிபதி நியமிப்பார்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதம வேட்பாளர் தொடர்பாக தீர்மானங்கள் எட்டப்படாத நிலையில் ஜனாதிபதியே பிரதமர் வேட்பாளரை தெரிவு செய்வார் என எதிர்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதுவரை பாராளுமன்றம் கலைகக்பபட்டு பொதுத் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்காததினால் பிரதமர் வேட்பாளர் குறித்து பினனர் தீர்மானிக்க முடியும் எனவும், வேட்பு மனுத் தாக்கல் தொடர்பாக கட்சியின் தெரிவுக்குழுவிடம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேண்டுகோள் முன்வைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

போட்டியிடுபவர் யாராக இருப்பினும் கட்சியின் தெரிவுக்குழு அனுமதி வழங்கிய பின்னரே போட்டியிட முடியும்.

மேலும் பிரதமர் வேட்பாளரை நியமிப்பது ஜனாதிபதியே எனவும் இது தொடர்பாக யாரும் கணிப்புச் சொல்ல முடியாது எனவும் எதிர்க் கட்சி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவின் குற்றங்களை கண்டு கொள்ளாத ரணில்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சி தேடாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக ஜே.வி.பியின் மாகாண சபை உறுப்பினர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது, மகிந்தவை மீண்டும் பதவிக்கு கொண்டு வருவதற்கான முயற்சியாக இருக்கலாம் என சந்தேகம் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விரும்புவதாக தெரிகின்றது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க உட்பட அக்கட்சியின் குழுவினர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நான் நினைப்பது ஒன்றும் தவறில்லை.

ஏன் என்றால் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிரிந்தால் நல்லது என நினைக்கின்றார்கள் என்று தான் தோன்றுகின்றது.

அதன் பின்னர் மகிந்தவை அழைத்து வந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் கைவிடபட்டவர்களுடன் ஒன்றிணையலாம் என ரணில் விக்ரமசிங்க நினைத்திருப்பார்.

மகிந்தவை மீண்டும் கொண்டு வருவதற்கான அவசியம் ஐ.தே.க விற்கு இருக்குமென்றால் மகிந்த தொடர்பாக குற்றங்களை ஐ.தே.கவினர் முன்னோக்கிக் கொண்டு செல்ல மாட்டார்கள்.

இதனால் தான் மகிந்தவின் குற்றங்களை குறித்து ஐ.தே.க. கண்டுக்கொள்ளாமல் இருக்கின்றது என லால் காந்த மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்

இலங்கை நீதித்துறை கட்டமைப்பு தொடர்பான மக்களின் நம்பிக்கையை 90 வீதம் கட்டியெழுப்ப முடியும் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொனராகலை பிபில பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார். நாட்டின் நீதியானது அதிகார வர்க்கத்திற்கும், செல்வந்தர்களுக்கும், அவர்களின் வயிற்றுக்காக மட்டும் இருககக்கூடாது. தமது பிள்ளைகளுக்கு ஒருவேளை உணவை வழங்க முடியாதவர்கள் நீதிமன்றங்களுக்கு வருகின்றனர்.

இப்படியானவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் சரியாக கையாண்டு தீர்ப்பொன்றை வழங்க முடியாவிட்டால் நீதிமன்றங்களினால் என்ன பயன் எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நீதிமன்றத்தில் பலன் இருக்கின்றதா என்பதை பார்க்க வழக்கில் வழங்கும் தீர்ப்பை விட அதன் குணாதிசயத்தை பார்க்க வேண்டும் எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இல்லமெய்வல்லுநர்போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ப.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# இராசி பலன்

16.02.2015

(மாசி 04, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

துவாதசி பிற்பகல் 12.55 மணிவரை

பூராடம் நண்பகல் 12.01 மணிவரை

இராகுகாலம் 8.08- 9.33 மணிவரை

சுபநேரம் 12.33-2.03 மணிவரை

வளவன்

**மேடம்** — நல்லவர்களை சந்தித்து நலன் காணும் நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிபுக்கு வரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**இடபம்** — குடும்ப பொறுப்புக்கள் கூடும், நண்பர்களுடன் பேசும் போது நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, தேவையற்ற செலவுகள் மேலோங்கும் நாள், முயற்சிகள் தாமதாகும்.

**மிதுனம்** — இல்லத்தில் இணிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாய் நடந்து கொள்வர், சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும் நாள்.

**கடகம்** — உறவினரின் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், பகைவர்கள் விலகுவர், முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** — பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம், வாழ்க்கையில் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள், அறை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சிறப்பான நாள்.

**கன்னி** — தொழிலில் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, புத்தி சாதுர்யமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார்.

**விருச்சிகம்** — சுபகாரியத்திற்கு பிள்ளையார் சுழிபோடும்நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** — சவால்களை சமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உடல் நலனில் முன்னேற்றம் ஏற்படும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** — ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** — நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணிய படியே கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும்.

**மீனம்** — முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உட்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தரத்திலான கற்கை நெறிகள்:

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பம்

இலங்கையில் கல்விக்கொள்கைகளிலும் பாடத்திட்டத்திலும் புதிய பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

குறிப்பாகஉயர்கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகளைஅதிகரிக்கும் வகையில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்று வந்தாலும், அம் மாற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் குறைவாகவே உள்ளன.

இலங்கைத் தொழிற் திணைக்களத்தின் கருத்துப்படி இலங்கையில் 825 வகையான வேலைவாய்ப்புக்கள் உள்ளபோதும், அவ்வேலைவாய்ப்புகளுக்குரிய பணியாளர்களை தேர்ந்தெடுப்பதிலும், பதவி வெற்றிடங்களை நிரப்புவதிலும் இன்னமும் சிக்கல் தன்மையே காணப்படுகின்றது. பணியாளர்களின் உள்ளார்ந்த ஆற்றல், தேவைகள் மற்றும் விருப்பங்கள் என்பவற்றிற்கேற்ப அவர்களின் திறமைகளை இனங்கண்டு பயிற்றுவிப்பதற்கு, இலங்கையில் பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றபோதிலும், அதுதொடர்பான விழிப்புணர்வும் குறைவாகவே காணப்படுகின்றது.

குறித்தவொரு ஆண்டில் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் ஏறத்தாழ 50 சதவீதமானோர் உயர்தர வகுப்பிற்கு செல்கின்றனர்.

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையும் மாணவர்களில் ஏறத்தாழ 9 சதவீதமானோர் பல்கலைக் கழகங்களிலும், மிகுதியில் அண்ணளவாக 3200 மாணவர்கள் கல்வியியற் கல்லூரிகளிலும் உயர் கல்வியை பெற்றுக்கொள்ள, எஞ்சிய மாணவர்களில் சிலர் ஏனைய வழிவகைகளில் உயர்கல்வியையும், தொழில்வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ளுகின்றனர். மிகுதியான பெருந்தொகை மாணவர்களின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் இலங்கையின் தொழில்நுட்பம், வாழ்க்கை தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித்திட்டத்தின் கீழ் 20 பல்கலைக்கழக கல்லூரிகள் அரசாங்கத்தினாலும் மற்றும் 5 அரச மற்றும் தனியார் பங்குதாரர்களாக இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளாகவும், நாடளாவிய ரீதியில் மொத்தமாக 25 பல்கலைக் கழகக் கல்லூரிகள் பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவுவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மேலதிக கல்வி வாய்ப்புகளை வழங்குதல்
2. NVQ மட்டம்-4 தகைமையுடைய மாணவர்களுக்கான மேலதிக கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
3. கைத்தொழில் நிறுவனங்களுக்கான நடுத்தரமட்ட தொழிலநுட்பவியலாளர்கள் மற்றும் முகாமையாளர்களைஉருவாக்குதல்

இதன் ஆரம்பகட்டமாக2008-ம் ஆண்டு 31-ம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் 5 பல்கலைக்கழகக் கல்லூரிகள் யாழ்ப்பாணம், அநுராதபுரம், குளியாப்பிட்டிய, இரத்மலானை மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் 2014 ஐப்பசி மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டமாணவர்கள் முதல் ஆறு மாதங்கள் அடிப்படை கற்கை நெறியையும் பின்பு ஒரு வருடம் NVQ மட்டம் 5 கற்கை நெறியையும் மேலும் ஒரு வருடம் ஏேஞ மட்டம் 6கற்கைநெறியையும் கற்கவேண்டும். இறுதி ஆறு மாதங்கள் துறைசார் பயிற்சியினை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் (On the Job Training) பூர்த்திசெய்தல் வேண்டும்.

நாடளாவியரீதியில் பல்கலைக் கழகக் கல்லூரிகளுக்காக 44 டிப்ளோமா கற்கை நெறிகள்உள்ள போதிலும் இல.17, பிறவுண் வீதியில உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரியில் 8 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க. பொ. த உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்துத் துறை மாணவர்களும் பின்வரும் 2 கற்கைநெறிகளிற்கும்

1. விருந்தோம்பல் மற்றும் உபசரணைமுகாமைத்துவம் (Hospitality Management)
2. அழகுக் கலையியல் (Cosmetology)

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் மாணவர்கள் பின்வரும் 6 கற்கைநெறிகளிற்கும் விண்ணப்பிக்கமுடியும்.

3. உணவுத் தொழில்நுட்பவியல (Food Technology)
4. கட்டடசேவைகள் தொழில் நுட்பவியல் (BuildingServicesTechnology)
5. கட்டட தொழில்நுட்பவியல் (ConstructionTechnology)
6. உற்பத்திதொழில்நுட்பவியல் (roductionTechnology)
7. பண்ணை இயந்திர தொழிலநுட்பவியல்(Farm Machinery Technology)
8. இயந்திர மின்னணுவியல் (MechatronicsTechnology)


இதுவரைகாலமும் NVQ மடடம் 5, 6இற்கான சான்றிதழ்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மட்டம் 7 இற்கான சான்றிதழ்கள் இரத்மலானையில் அமைந்துள்ள வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகத்திலும் (University of Vocational Technology)வழங்கப்பட்டன. தற்போது முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் 5அரச மற்றும் 3 அரச-தனியார் பங்குதாரர்களாக இணைந்த பல்கலைக் கழக கல்லூரிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

**தேசியவாழ்க்கைத் தொழில்சார் தகைமைகள் (National Vocational Qualification)**

மூன்றாம் நிலை மற்றும் தொழில் சார் கல்விஆணைக்குழு (TVEC) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட திறன் அபிவிருத்தி செயற் திட்டத்துடன் இணைந்து, இலங்கையில் தொழில்நுட்ப தொழில் சார் கல்வி மற்றும் பயிற்சிதுறைகளிற்கான தேசிய சான்றிதழ் திட்டமொன்றை (NVQ) அறிமுகம் செய்தது. 2005 தை மாதத் திலிருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்ட இம் முறைமையானது "தேசிய வாழ்க்கைத் தொழில்சார் தகைமைகள்" என்று அழைக்கப்படுகின்றது. 1990-ம் ஆண்டின் 20-ம் இலக்க மூன்றாம் நிலைமற்றும் தொழில்சார் கல்விச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட துறைகளிற்கான சான்றிதழ்களை வழங்கும் இடங்களில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வித் தகைமைகளை வழங்குவதற்கான முறைமைகளை உருவாக்க வேண்டி இருக்கின்றது.

தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை முறைமை என்ற சட்ட வரையமைப்பானது, தொழில்நுட்ப வாழ்க்கைத் தொழில் சார் கல்வி மற்றும் பயிற்சித் துறைகளில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மாற்றங்களினால் உருவாக்கப்பட்டது. இது எதிர்காலத்தில் இலங்கையில முன்னணி வகிக்கும் ஒரு வாழ்கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பத் தகைமையாக திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. NVQ சட்டவரையமைப்பானது NVQ துறையில் கடந்த காலங்களில் உள்ள பல பின்னடைவுகளை நிவர்த்தி செய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

NVQசட்டவரையமைப்பானது 1 தொடக்கம்7 வரைஅதிகரித்து செல்லும் ஏழு துல்லியமான தகைமை நிலைகளை கொண்டுள்ளது. அந்நிலைகளின் அதிகரித்து செல்லும் போக்கு கீழேதரப்பட்டுள்ளது.




| | | |
|---|---|---|
| மட்டம் | 1 - 4 | தேசிய சான்றிதழ்மட்டம் (National Certificate) |
| மட்டம் | 5 | தேசிய டிப்ளோமா மட்டம் (National Diploma) |
| மட்டம் | 6 | தேசிய உயர்டிப்ளோமா மட்டம் (National Diploma) |
| மட்டம் | 7 | பட்டதாரி மட்டும் (Degree) |

அரசின்கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள NAITA, VTAபோன்ற பயிற்சி நிலையங்களில், NVQ மட்டம் 1 முதல் NVQமட்டம் 4 வரையிலான சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலுள்ள தொழில்நுட்பகல்லூரிகளில் NVQ சான்றிதழ், டிப்ளோமா கற்கைநெறிகளை மேற்கொள்ளமுடியும். எனவே ஆர்வமுடையோர், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டு தற்போது நெடுஞ்சாலைகள், உயர்கல்விமற்றும் முதலீட்டு ஊக்குவிப்புஅமைச்சின் கீழ் இயங்கும் சிறப்புவாய்ந்த இத்தொழில்சார் கல்வி நிலையங்களில் தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் தங்களின் எதிர்காலத்தினை பிரகாசமானதாக்கிக் கொள்ளமுடியும்.

## அடகு நகைகளை ஏலம் விடவேண்டாம்

அரச வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏப்ரல் மாதம் வரை ஏலத்தில் விட வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட யோசனைகளின் பிரகாரம் அரச வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்காக அறவிடப்படும் வட்டி நீக்கப்படும் வரை இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ள 2 இலட்சம் ரூபாவிற்கும் குறைந்த பெறுமதியுடைய தங்க நகைகளுக்கான வட்டியை முழுமையாக நீக்குவதற்கு அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக் கால வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூகுள் வணிக குழு வெற்றிகரமான கதைகளில் SLIIT மாணவர்கள் பிரகாசிப்பு

SLIIT கல்வியகத்தின் பழைய மாணவர்களான விமுக்தி லியனகே மற்றும் ஷமீர வீரசிங்க ஆகியோர் மொபைல் அப்ளிகேஷன் உலகில் சர்வதேச நிலையை எய்தியுள்ளனர்.

இந்த இருவரும் இணைந்து Mogo Reader எனும் புத்தமைவான அப்ளிகேஷனை உருவாக கியிருந்தனர். இந்த அப்ளிகேஷன் கூகுள் வணிக குழு வெற்றிகரமான கதைகள் போட்டியில் சிறந்த திட்டமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வை கூகுள் ஏற்பாடு செய்திருந்தது.

## 3விருதுகளை வென்ற ஜனசக்தி



ஜனசக்தி காப்புறுதி நிறுவனமானது, அண்மையில் ஏசியன் பசுபிக் ஹோட்டல், சிங்கப்பூரில் இடம் பெற்ற 5-வது CMO ஆசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் மீண்டுமொரு தடவை 3 பிராந்திய விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளது. சர்வதேச வர்த்தகநாம காங்கிரஸ் மூலம் ஏற்பாடு செய்யப்படும் வர்த்தகநாம செயற்திறனுக்கான உலகளாவிய விருதுகள் நிகழ்வானது உலகின் மிகச் சிறந்த வர்த்தக நாமத்தை கொண்ட நிறுவனங்களின் சாதனைகளை பாராட்டும் ஒரேயொரு மிகப்பெரிய விழாவாக கருதப்படுகிறது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,162.75 | 7,335.51 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,958.93 | 4,113.19 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 8,496.286 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** பிசி ஹவுஸ்(0.30), ஹீல்ஸ் பூட்(110.00), சுவிஸ் ரெக்(46.20), பிசிஎச் ஹோல்டிங்ஸ்(2.80), சிலோன் பேவரேஜ்(82.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிலோன் பிறின்டேர்ஸ்(1200.00), சிஐரி (136.10), பின்லேஸ் களம்பு(96.00), டேர்டன்ஸ்(96.00), லங்கா ஐஓசி(50.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.69 | 134.43 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 201.87 | 207.58 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.15 | 154.08 |
| சுவிஸ் பிராங் | 140.86 | 145.85 |
| கனேடிய டொலர் | 104.63 | 108.08 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.03 | 105.03 |
| சிங்கப்பூர் டொலர் | 96.56 | 99.68 |
| ஜப்பான் யென் | 1.10 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.15 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலை குறைக்கப்பட்டால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்

## காலியில் பிரதமர் தெரிவிப்பு

விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுப் படுத்துவதற்காக அரிசி, உருளைக்கிழங்கு போன்ற பொருட்களுக்கு நிர்ணய விலை வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாகவே அப் பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை என, காலியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இன்று பலரின் கேள்வியாக இருப்பது ஏன் அரிசி விலை குறைக்கப்படவில்லை என்பதாகும். விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் அரிசி விலையை குறைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை அத்தியாவசிய 10 பொருட்களின் விலை குறைப்பதாகவே வாக்குக் கொடுத்தோம். எனினும் 13 பொருட்களின் விலைகள் குறைக் கப்பட்டுள்ளது.

அரிசி விலை குறைக்காமைக்கு நான் மக்க ளிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஐயாயிரம் பேருக்கு சலுகை வட்டியில் வீட்டுக்கடன்

(கொழும்பு)

ஒரு தேர்தல் தொகுதியில் 30 பேரை தெரிவு செய்து ஐயாயிரம், 75 ஆயிரம் ரூபா வீதம் கடன் உதவி வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மனதுக்கு நிம்மதி, தங்குவதற்கு இடம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் இக்கடன் உதவி வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வீடு மற்றும் சமுர்த்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி 2015 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அரசாங்கத்தின் அனுசரணையில் 55 ஆயிரம் வீடுகளை மக்களிடம் கையளிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் சமுர்த்தி சமூக ஒன்றியத்தை மறுசீரமைப்பதற்கும் குறித்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்ப ங்களை தெரிவு செய்து குறைந்த வட்டியில் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்குவதற்கு வீடு மற்றும் சமுர்த்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. (இ-5)

# அன்னத்திற்கு வாக்களித்தவர்கள் யானைக்கு அளிக்க மாட்டார்கள்

ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பலாங்கொடயில் இருக்கும் எனது எரிபொருள் நிரப்பும் நிலையம் 170 கடன் செலுத்த வேண்டியிருந்ததுடன் அதனை செலுத்தியதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார். அது பொய்யா னது. நான் அப்படி கடன் வைக்கவும் இல்லை. அதனை செலுத்தவும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. கடந்த முறை அன்னப்பறவை சின்னத்திற்கு வாக்களித்த ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியினர் இம்முறை யானை சின்னத்திற்கு வாக்களிக்கமாட்டார்கள்.

எந்த தேர்தல் முறை வந்தாலும் எம்மால் வெற்றி பெற முடியும். தொகுதி வாரி தேர்தல் முறையை கொண்டு வருமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

புதிய அரசாங்கம் இரண்டு, மூன்று மாதங் களில் எந்த அபிவிருத்தியையும் மேற்கொள் ளாது எனவும் சஜின் வாஸ் குணவர்தன மேலும் தெரிவித்தார். (இ-5)

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**செல்வி நாகநந்தினி சங்கரப்பிள்ளை**

**(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)**

**16.02.2015**

*அகவை அறுபதில் கால் பதிக்கும்*
*உன்னை அகமகிழ்ந்து*
*வாழ்த்துகின்றோம்*
*காலமெல்லாம் அனைத்து*
*சுகங்களும் உனை வந்து சேர*
*அனுதினம் வேண்டுகின்றோம்*
*இறைவனையே!*

இன்று மணிவிழாக் காணும்
பத்தாவத்தை இளவாலையைச்
சேர்ந்த செல்வி நாகநந்தினி
சங்கரப்பிள்ளை அவர்கள்
நோய் நொடியின்றி நீடூழி
வாழ எல்லாம் வல்ல
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**க.சிவசங்கரநாதன்**
**குடும்பம், சாவகச்சேரி.**




# கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரீச்சரர் சிவாலய சிவராத்திரி விழா-17.02.2015

*உருத்திரபுரீச்சரர் அடியார்களே!*

திருமூலநாயனாரால் "சிவபூமி" என்று அழைக்கப்பட்டஇலங்காபுரியின் வட்பால் நீர்வளமும் நிரம்பப்பெற்ற கிளிநொச்சி மாநகரில் கி.மு.2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆராய்ச்சியாளர்களால் கூறப்படும் உருத் திரபுரம் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீச்சரர் ஆலயத்தின் சிவராத்திரி விழா.

நிகழும் மங்களகரமான 2015 வருடம் மாசித்திங்கள் 5 ஆம் நாள் 17.02.2015 செவ்வாய்க்கிழமை நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்றைய நாளில் சிவனடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து நடைபெறும் விசேட பூசைகளில் கலந்து அவனருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*நிகழ்வுகள் தவத்திரு கணேசானந்த சுவாமிகள் (மகாதேவா ஆச்சிரமம் ஜெயந்திநகர்) அவர்களின் நல்லாசியுடன் ஆரம்பமாகும்.*

**மாலை 5.30 மணிக்கு சிறிமத் பரமானந்தவல்லி நினைவாலயத்தில் விசேட பூசைகளுடன் விழா ஆரம்பமாகும்.**

**நான்கு சாமப்பூசை நேரங்கள்**

**முதலாம் சாமம்:-** நபனாபிடேகத்துடன் 6.00 மணிமுதல் 7.30 மணிவரை

**இரண்டாம் சாமம்:-**நபனாபிடேகத்துடன் 9.00 மணிமுதல் 10.30 மணிவரை

**மூன்றாம் சாமம்:-** லிங்கோற்பவர் பூசை, நபனாபிடேகத்துடன் 11.00 மணிமுதல் 12.30 மணிவரை (மேற்படி பூசை செந்தமிழில் நடைபெறும்)

**நான்காம் சாமம்:-** உருத்திராபிடேகத்துடன் காலை 4.00 மணிமுதல் 5.30 மணி வரை பூசைகளின் இடையேயுள்ள நேரங்களில் பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். பூசைகள் முடிவுற்றதும் எம் பெருமான் வீதியுலா வரும் காட்சியுடன் விழா நிறைவுபெற்று அன்னதானம் வழங்கப் படும். இரவு முழுவதும் நீராகாரம், கோப்பி என்பன இலவசமாக வழங்கப்படும்.

சைக்கிள் பாதுகாப்பு, காவல் கடமை, வைத்திய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**விழா உபயம்:** அமரர் சு.வேலுப்பிள்ளை குடும்பம் இல 64 D-10 உருத் திரபுரம்

**தண்ணீர்ப்பந்தல்:** அமரர் ஐயம்பிள்ளை குடும்பம் இல.100,D-10 உருத் திரபுரம்

**மங்கள வாத்தியம்:**திரு. துஸ்யந்தன்குழுவினர், கோணாவில்

**ஒலி ஒளி அமைப்பு:** திரு.யசோதரன் சிவகுரு மோட்டோர்ஸ், கிளிநொச்சி

சுகாதாரம் சுற்றாடல் பேணலும் மருத்துவ சேவையும் கரைச்சி பிரதேச சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, சுகாதாரசேவை வைத்திய அலுவலகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ,கிளிநொச்சி.

எம்பெருமான் அடியார்கள் இவ்விழாவில் கலந்து கொள்வதோடு தேவை யான சிவத்திரவியங்களையும் நிதியுதவியையும் வழங்கி மானிடப்பிறப்பின் கிடைத்தற்கரிய பேறினைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வை அடைய வேண்டுமென அன்புடன் அழைக்கின்றோம்.

உருத்திரபுரம்
கிளிநொச்சி.

**அனைவரும் வருக சிவனருள் பெறுக**
**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

இங்ஙனம்
ஆலய அறங்காவல்
அவையினர்
உருத்திரபுரீச்சரம்.

**சிற்றி சென்ரர் பல்வகை வியாபாரம்**
**கூழாவடி-D-10 உருத்திரபுரம்**
எம்மிடம் சகல விதமான கட்டடப்பொருட்கள், மின்சார உதிரிப்பாகங்கள், மிதிவண்டி உதிரிப் பாகங்கள், பி.பி.சீ.பைப் வகைகள், விவசாய இரசாயனப் பொருட்கள் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**இசை நிலா உணவகம்**
**கூழாவடி-D-10 உருத்திரபுரம்**
எம்மிடம் அறுசுவை உணவு வகைகள் குளிர்பானங்கள் நியாய விலையில் பெற் றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்
ஜீவா

**பரா சித்த ஆயுர்வேத வைத்தியம் இல. 37/1, சிவநகர்உருத்திரபுரம்**
முட்டு, சலரோகம், கடிசொறி, மூலரோகம், வாதம், வாய்வு, நோவு மற்றும் அனைத்து ரோகங்களுக்கும், ஆயுர்வேத மூலிகைககள் மூலம் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.
வைத்தியர், அ.இரகுபதி, பதிவு இல. 7105

**ஐங்கரன் நகைமாடம்**
Ieynkaran
Nagai Madam
077 1041 299
யாழ்.சாலை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60-வது ஆண்டு விழாவும் மகா சிவராத்திரி விழாவும்


வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைசமய அபிவிருத்திக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3மணிக்கு ஆலய மண்டபத்தில் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார்.

திருமுறைச் செல்வன். சி.கிருஷ்ணமூர்த்தியின் திருமுறை ஓதலுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் அகில இலங்கை திருமுறை மன்ற மாணவர்களின் பண்ணிசை, செல்வி. இ.லதாங்கியின் கீர்த்தனை என்பன இடம்பெறும்.

ஆசியுரையை ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ரகுராமக்குருக்களும், வாழ்த்துரையை ஆலய தர்மபரிபாலனசபைத் தலைவர் செ.சுப்பிரமணியமும் வழங்கவுள்ளார்கள்.

இதேவேளை கலாபூஷணம் லெ.கெங்காதரன் ஆச்சாரி, சு.நாகலிங்கம் ஆச்சாரி, செல்வி. ச.விஜயலட்சுமி ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வுடன் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற சைவசமய அறிவுப் பரீட்சை, நீதிநூல் மனனப் போட்டி, கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

ஆலய பூசை நிகழ்வுகளாக சிவராத்திரி நான்கு சாமப்பூசைகள் இரவு 8 மணி, நள்ளிரவு 12 மணி, அதிகாலை 3மணி, காலை 5 மணிக்கும் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)




## சிவராத்திரி தின சொற்பொழிவு

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் சரசாலை இந்து மன்றத்தால் நடத்தப்படும் மகாசிவராத்திரி தின சொற்பொழிவுகள் முப்பதாவது ஆண்டாக நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் சமாதான நீதவான் க.சிவசங்கரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்படும் என சரசாலை இந்துமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன் வழமைபோல் ஆலயத்தின் நான்குசாமப்பூசையும் அபிசேகமும் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## மெய்வல்லுநர் போட்டி

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொ.சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் எஸ்.மோகனராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் கொண்டா காட்சியறை முகாமையாளர் எஸ்.காந்தரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (இ-3)

## மணிவிழா

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் அ.கைலாயபிள்ளையிற்கு பாடசாலை சமூகத்தினரால் நடத்தப்படவுள்ள மணிவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாணசபை அமைச்சர் த.குருகுலராசா, உறுப்பினர் ப.அரியரத்தினம், கே.சயந்தன் மற்றும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களான க.கந்தசாமி, கா.குகபாலன், ப.புஸ்பரட்ணம் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கவுள்ளனர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை உப அதிபர் ச.லலீசன் நினைவு மலரினை வெளியிட்டு வைக்கவுள்ளார். (இ-5)

# கல்லுண்டாயில் கழிவு கொட்டுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

### ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**கல்லுண்டாய் வெளியில் கழிவுகள் கொட்டப்படுவதை உடன் நிறுத்துமாறு கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ் ஆர்ப்பாட்டம் நேற்று காலை 8.30 மணியளவில் அராலி வீதி கல்லுண்டாய் வெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.**







யாழ்.மாநகர சபையின் கழிவுகள், யாழ்.போதனா வைத்தியசாலைக் கழிவுகள், பிரதேச சபை மற்றும் இராணுவத்தினர் என பலதரப்பட்டவர்கள் கல்லுண்டாயில் குப்பைகளை கொட்டி வருகின்றனர்.

இதனால் கல்லுண்டாயில் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருவதோடு கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் அதிகரித்து வருகின்றது.

கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படுகின்ற கழிவுகள் காற்றினால் கடற்பகுதிக்கு எதிர்ப்புறமாக சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள நவாலி கிராமத்திற்கு தூக்கிச் செல்லப்பட்டு பரவி விடப்படுகின்றன.

நவாலி கிராமத்திற்கும் கல்லுண்டாய் வெளிக்கும் இடைப்பட்ட இடத்திலுள்ள நெல் வயல்களிலும் காற்றினால் அடித்து வரப்படுகின்ற பொலித்தீன்கள் பரவி விடப்படுகின்றன.

இதனால் விளைநிலங்கள் மாசடைவதோடு நெற் கதிர்களின் வளர்ச்சியும் குன்றிக் காணப்படுகின்றது.

காற்றினால் அடித்துச் செல்லப்படுகின்ற பொலித்தீன்கள் வீடுகளிலுள்ள குடிநீர் உட்பட அனைத்து கிணறுகளிலும் கொட்டிவிடப்படுவதனால் நீர் மாசடைவும் ஏற்படுகின்றது.

கல்லுண்டாயில் கொட்டப்படுகின்ற கழிவுகளை தேடி வரும் கட்டாக்காலி நாய்கள் மாலைநேரங்களில் ஊருக்குள் வந்து ஊர் நாய்களுடன் கடிபடுவதனால் விசர் நாய்க்கடி அபாயம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது என அம்மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு விசர் நாய்க்கடியினால் கடந்த 2013 ஆம் ஆண்டு நவாலியைச் சேர்ந்த சிறு குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

மழை காலங்களில் நவாலியிலுள்ள அனைத்து வீடுகளிலும் இலையான்களின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கொட்டப்படுகின்ற கழிவுகளை அப்படியே விட்டு தீ வைத்து விடுவதனால் பெரும் புகை மூட்டம் ஏற்பட்டு கிராமங்களுக்கும் அப்புகை மூட்டம் பரவிச் சென்று மூச்சுத் திணறலை ஏற்படுத்துகின்றது.

கழிவுகளை எரிப்பதனால் ஏற்படுகின்ற பாரிய குழிகளில் கால்நடைகள் வீழ்ந்தும் உயிரிழந்தும் வருகின்றன.

கல்லுண்டாயில் கொட்டப்படுகின்ற கழிவுகள் தற்போது வீதியின் கரைக்கு வந்துள்ளதனால் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் கொட்டப்படுகின்ற கல்லுண்டாய் கழிவுகளினால் நிலம், நீர், காற்று, விவசாயம், உயிர்கள் என அனைத்தும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளன.

இவ் அழிவுகளினை தடுக்குமாறு யாழ்.மாநகர சபை உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டும் பொறுப்பற்ற விதத்தில் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

தினமும் சுமார் 100 முதல் 120 வரையிலான உழவு இயந்திரங்கள் மூலம் திண்மக் கழிவுகளையும் 20 இற்கு மேற்பட்ட மலக்கழிவு பவுசர்களையும் கொட்டி வருகின்றனர்.

நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இச் செயற்பாடுகளின் தாக்கம் தற்போதும் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டி ஆர்ப்பாட்டக்காரர்கள் நவாலி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு இடங்களைச் சேர்ந்தவர்கள் ஆஸ்துமா, புற்று நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி வருவதாக குறிப்பிடுகின்றனர்.




இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் அத்துமீறி கழிவுகளை கொட்டுவதனை நிறுத்துமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இயற்கை வனப்பு கொண்ட கல்லுண்டாய் பிரதேசம் பொறுப்பற்றவர்களின் நடவடிக்கைகளினால் அழிந்து போவதனை வடக்கு மாகாண சபையும் பொறுப்பற்றவர்களோடு சேர்ந்து நின்று வேடிக்கை பார்க்கின்றதா?

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சரும் சூழலியலாளருமான பொ.ஐங்கரநேசன் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கையெடுக்க வேண்டுமென இம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இவ் ஆர்ப்பாட்டம் குறித்து யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் எஸ்.பிரணவநாதனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

மாநகர சபை, கல்லுண்டாயில் 20 வருடங்களுக்கு மேலாக குப்பை கொட்டி வருவதாகவும் திடீரென நிறுத்துமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் நிறுத்த முடியாதெனவும் மேலும் இங்கு குப்பை கொட்டுவது தொடர்பில் யாரும் கடிதம் மூலம் தனக்கு அறிவிக்கவில்லையெனவும் வலம்புரியிடம் தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கமநல காப்புறுதி சபையால் ஒய்வூதியம் வழங்கப்பட்டது

(மல்லாவி)

**முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குரிய கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் ஊடாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்திருந்த 12 விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 400 ரூபா ஓய்வூதியப் பணமாக வழங்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதிப் பணிப்பாளர் பி.பூரணச் சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கமக்கார ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்திருந்த வவுனியா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 10 விவசாயிகளுக்கும் மற்றும் முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள குமுழ முனை, தாழையடி ஆகிய இரு கிராமங்களில் உள்ள விவசாயிகளுமாக மொத்தம் 12 விவசாயிகளுக்கு கமக்கார ஓய்வூதியப் பணம் வழங்கப் பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில் இருந்து நடப்பாண்டு ஜனவரி மாதம் வரையுள்ள மாதம் ஒன்றிற்கு ஆயிரத்து 150 ரூபா வீதம் 13 மாதங்களுக்கும் 14 ஆயிரத்து 950 ரூபா பணம் 60 வயதைக் கடந்த விவசாயி ஒருவருக்கு ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இவர்களுக்கான இவ் ஓய்வூதியப் பணம் மாதாந்தம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள கமநலசேவை நிலையங்களுக்குட் பட்ட கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்துள்ள 60 வயதைக் கடந்துள்ளவர்களுக்கான ஓய்வூதியம் அந்ததந்த பிரதேச செயலகங்கள், கமநல சேவை நிலையங்களில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)




# உருத்திரபுரத்தில் சிவராத்திரி விழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் சிவாலயத்தில் சிவராத்திரி விழா நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி அடைந்துள்ளன.

மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த தவத்திரு கணேசானந்த சுவாமிகளின் ஆசியுடன் இந்நிகழ்வுகள் பிற்பகல் 5.30 மணிக்கு ஸ்ரீமத் பரமானந்த வல்லி நினைவாலயத்தில் விசேட பூசைகளுடன் ஆரம்பமாகும்.

நான்கு சாமப் பூசைகள் நடைபெறவுள்ளதுடன் பூசை நேரங்களின் இடையே பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

சுகாதாரம் சுற்றாடல் பேணலும் மருத்துவ சேவையும் கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினர், சுகாதார சேவைவைத்திய அலுவலகத்தினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோரால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடியார்கள் இவ்விழாவில் கலந்து சிவனருள் பெறுமாறு ஆலய அறங்காவல் சபையினர் கேட்டுள்ளனர். (அ-2-254)

## வாகன விபத்தில் ஐவர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதுண்ட விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த நான்கு மாணவிகளும் அதன் சாரதியும் படுகாயம் அடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நான்கு மாணவிகளும் முச்சக்கரவண்டியில் கடந்த 13 ஆம் திகதி பயணித்துக் கொண்டிருந்த போதே மாங்குளம் பிரதான வீதியின் நீராவிப்பிட்டி பிரதேசத்தில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது,

குறித்த முச்சக்கரவண்டிக்கு பின்னால் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியின் மீது மோதுண்டதையடுத்து, முச்சக்கரவண்டி வீதியோரம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சிகிச்சைகளின் பின்னர் மூன்று மாணவிகள் வீடு திரும்பியுள்ளதாகவும் முச்சக்கர வண்டியின் சாரதியும் மற்றொரு மாணவியும் வைத்திய சாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# துணுக்காய் வலயத்திலுள்ள 60 பாடசாலைகளுக்கு நிதி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் தர உள்ளீட்டு நிதியொதுக்கீட்டின் மூலம் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் 60 பாடசாலைகளிலுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள் உட்பட பாடசாலைகளில் சிறு திருத்தங்கள் மற்றும் சிறு உபகரணத் திருத்தம் என்பவற்றுக்காக 50 இலட்சத்து 76 ஆயிரத்து 386 ரூபா பங்கீடு செய்யப்பட்டு பாடசாலைகளின் அபிவிருத்தி குழு வங்கி கணக்கிற்கு வைப்பிலிடப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள தரம் 6 தொடக்கம் 13 வரையான 23 பாடசாலைகளுக்கும் மற்றும் 47 ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி இணைந்த பாடசாலைகளுக்குமான மொத்தம் 60 பாடசாலைகளுக்கு மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை ஊக்குவித்தல் மற்றும் ஆசிரியர்களின் வகுப்பறை செயற்பாடுகள் உட்பட ஆசிரியர் வாண்மை விருத்தி உள்ளிட்டவற்றுக்கு 14 இலட்சத்து 79 ஆயிரத்து 594 ரூபாவும் மற்றும் பாடசாலைகளில் சிறுபுனரமைப்பு, சிறு உபகரணத்திருத்தம் என்பவற்றுக்காக 35 இலட்சத்து 96 ஆயிரத்து 792 ரூபாவுமாக நிதியொதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இந்நிதியை சீரான முறையில் பாடசாலைகள் பயன்படுத்துகின்றதா என காலத்திற்கு காலம் திடீர் பரிசோதனைகளை துணுக்காய் வலயக் கல்வி அலுவலக கல்வி அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிதி 31/12/2015 ஆம் ஆண்டிற்குள் பயன்படுத்தப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-15)

## கரைதுறைப்பற்று பிரதேச சபை
# தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் 12 வேட்பாளர்கள்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடப் போவதில்லையென எழுத்து மூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்ப்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெறவிருந்த கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பில் முதன்மை வேட்பாளராக களமிறங்கினேன்.

எனினும், எதிர்பாராத வகையில் தேர்தல் நடைபெறவில்லை.

குறித்த தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றால் மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் அது தொடர்பில் கடந்த 13ஆம் திகதிக்கு முன்னர் பதில் அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணையாளரிடமிருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

நான் இத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என பதில் அனுப்பியுள்ளேன்.

கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் த.தே.கூ. சார்பில் போட்டியிட இருந்த இரு வேட்பாளர்கள் தற்போது வெளிநாடு சென்றுள்ளனர். ஆகவே, போட்டி யிடுவதுக்கு களமிறங்கிய 15 வேட்பாளர்களில் என்னுடன் மூவர் போட்டியிட மாட்டார்கள்.

இதில் 12 வேட்பாளர்களே போட்டியிடவுள்ளனர். (அ-2)



(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி வலய கல்வித் திணைக்களமும் கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து கிளிநொச்சி பாடசாலை மாணவர்களிடையே நடத்திய அரை மரதன் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமாகி கிளிநொச்சி வலயக் கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக முடிவடைந்தது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி வலயக்கல்வி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் பி.விஷ்ணு தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஜேராஜ்குமார் (கிளி/புன்னை நீராவி அ.த.க. பாடசாலை), வி.பதுசன் (கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரி), ஆர் தனுஜன் (கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

சி.டிலக்சனா (கிளி/பாரதி வித்தியாலயம்), கே.குயிலினி (கிளி/சிவபாத கலையக பாடசாலை), பி.பிராத்தனா (கிளி/மத்திய மகா வித்தி) மேலும் முதல் பந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு மாகாண மட்ட போட்டியில் பங்கேற்பதற்கான பயிற்சி வழங்கப்படவுள்ளது. (அ-2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆதரவாளர்களை ஓரங்கட்டிய மைத்திரிபால

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதவிகளில் இருந்து மகிந்த ராஜபக்ச ஆதரவாளர்களை களையெடுத்து விட்டு கட்சியில் தனது கரத்தை பலப்படுத்தியுள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த, சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த பதவியை முன்னர் வகித்து வந்ததுடன் அதனை இராஜினாமா செய்திருந்தார்.

தேசிய அமைப்பாளர் பதவிக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அவர் சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளரான முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும வகித்து வந்த பொருளாளர் பதவி, வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.பி. நாவின்னவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தொடர்ந்தும் அந்த பதவியை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை. மகிந்த ராஜபக்ஷவினால். சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தற்போது. சுதந்திரக் கட்சியின் உயர்மட்டத்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளார். (இ-5)

# சு.க.வை திருத்தும் அதிகாரம் சந்திரிகாவிடம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசனை பேரவையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த கட்சியின் மத்திய குழு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் திருத்தங்களை செய்யும் அதிகாரம் இந்த ஆலோசனை பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனை பேரவையின் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ. முன்னாள் பிரதமர்களான டி.எம். ஜயரத்ன, ரட்ணசிறி விக்ரமநாயக்க ஆகியோரின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம் - 26



எப்படிடா உங்களால மட்டும் இப்படிப் பண்ண முடியுது?

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி, இல.03, 2-ம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். அல்லது நேரில்.

# கல்வி இராஜாங்க அமைச்சருடன் தமிழர் ஆசிரியர் சங்கம் சந்திப்பு



(கொழும்பு)

கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இச்சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன். நிர்வாகச் செயலாளர் கே.நல்லதம்பி, துணைத்தலைவர் எஸ். பாலசுப்ரமணியம், துணைப் பொதுச் செயலாளர் திருமதி.பா. சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வி இராஜாங்க அமைச்சர்களுடனான சந்திப்பின்போது வடக்கு. கிழக்கு மாகாணங்களில் தமிழ் பாடசாலைகளில் இதுவரைகாலங்களும் இருந்த குறைபாடுகள். முறைகேடாக நடைபெற்ற உயர்நிலைப் பதவியுயர்வுகள். வழங்கப்படாதுள்ள பதவியுயர்வுகள், அதிபர்கள், ஆசிரியர்களின் பதவியுயர்வுகள், முறைகேடான இடமாற்றங்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு மலையகப் பிரதேசங்களில் காட்டப்பட்ட பாகுபாடுகள், இன ரீதியிலான ஒதுக்கீடுகள் என்பன பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கஸ்ட. அதிகஸ்ட பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவது தொடர்பான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அதிபர்களின் பதவியுயர்வுக் காலங்களில் போர் மற்றும் சுனாமி, வெள்ளப்பெருக்குப் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விலக்களிப்பது தொடர்பாக இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் தமிழ்பிரிவுப் பணிப்பாளர் திருமதி.எஸ்.சடகோபனையும் குழுவினர் சந்தித்து தமிழ் மொழிக் கல்வியில் உள்ள குறைபாடுகள், சுற்றுநிருபங்கள் தொடர்பில் ஆராய்ந்ததோடு அவற்றை நிவர்த்திக்கும் உறுதிமொழிகளையும் பெற்றுக் கொண்டனர். (ந)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி ஆராய புதிய அரசு குழு அமைக்க வேண்டும்

(கொழும்பு)

கடந்த நான்கு வருடங்களாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் வெறுக்கத்தக்க பிரச்சாரங்கள் மற்றும் வன்முறைகள் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பைசர் முஸ்தபா மற்றும் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் அசாத் சாலி ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மேலும் அனைத்து இலங்கையர்களும் பாதுகாக்கப்படுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்ததைப் போல் அளுத்கம மற்றும் பேருவளை கொலைகளுக்கு தூண்டுகோளாக இருந்தவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படவில்லை என அவர்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் மூலம் குறிப்பிட்டதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேபோல் முஸ்லிம்கள் தொடர்பில் வழங்கப்பட்ட பல உறுதிமொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)

# முஸ்லிம்களை அகற்றாவிட்டால் தற்கொலை செய்ய நேரிடும்

பலாங்கொட குருகல பகுதியின் 52 ஏக்கர் காணியில் வசிக்கும் சட்டவிரோத குடியேற்றக்காரர்களை அகற்றாது போனால், தற்கொலை செய்துக்கொள்ளப் போவதாக சிஹல ராவய அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

சிஹல ராவயவின் தேசிய அமைப்பாளர் அக்மீமன தயாரட்ன தேரர் இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளார். ஏற்கனவே இந்த பகுதியில் இருந்த சட்டவிரோத குடியேற்றக்காரர்களை முன்னைய அரசாங்கம் அகற்றியிருந்தது. எனினும் தற்போதைய அரசாங்கம் மீண்டும் அவர்களை குடியேற அனுமதித்திருக்கிறது. இந்தநிலையில் இன்னும் ஒரு வாரத்துக்குள் இந்தப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட வேண்டும். இல்லையேல் பிரச்சினையை தமது கைக்குள் கொண்டு வரப்போவதாக தேரர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்துக்குள் இருக்கும் ஜாதிக ஹெல உறுமயவும் இந்த விடயத்தில் மௌனமாக இருப்பதாக தேரர் குற்றம் சுமத்தியுள்ளார். குருகல பகுதியில் குடியேறியுள்ள முஸ்லிம்களே சட்டவிரோத குடியேறிகள் என்று சிஹல ராவய குறிப்பிட்டுள்ளது.(இ-5)

# சு.க.வுக்காக பாடுபடுவேன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பத்தரமுல்லவில் உள்ள அபே கெதர என்னும் பகுதியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களினால் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை என இருவரும் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே திட்டமிட்ட பல செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியிருப்பதனால் தாம் இன்றைய கூட்டத்தில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. கடிதம் ஒன்றின்மூலம் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் கருணாநிதியின் அறிவுரை தேவையில்லை

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கருணாநிதியின் அறிவுரை தேவையில்லை என்று இந்திய மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவை குண்டு வெடிப்பு நினைவு தினத்தில் கலந்துக் கொள்ள கோவை சென்றிருந்த பாஜகவின் மக்களவை உறுப்பினரும் அமைச்சருமான பொன்.ராதா கிருஷ்ணன், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கருணாநிதியின் அறிவுரை தேவையில்லை என்றும், ஏற்கனவே மத்திய அரசு இந்தப் பணிகளை செய்து வருகிறது என்றும் கூறியுள்ளார். இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி மைத்திரியுடன் இலங்கைத் தமிழர்கள் நலன் குறித்து விவாதிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்தோடு இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சில கட்சிகள் அரசியல் செய்து வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நாவில்.இலங்கையில் நடைபெற்ற போர்குற்றம் தொடர்பாக பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும், இந்தியா வரும் மைத்திரியுடன் இலங்கைத் தமிழர்கள் நலன் குறித்து மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கூறியிருந்தார் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலநறுவையை விட்டு என்னை விரட்ட முடியாது

## வசந்த சேனநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தை விட்டு என்னை விரட்டியடிக்க முடியாது என பிரதி அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டமையை முன்னிட்டு நடத்தப்பட்ட விசேட வரவேற்பு நிகழ்வில் நேற்று இதனைக் தெரிவித்தார்.

புகை அடித்தாலும் நான் பொலனறுவையை விட்டு விலகிச் செல்ல மாட்டேன். கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் சிலர் பல்வேறு வன்முறைகளில் ஈடுபட்டனர்.

பின்னர் அரசில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டார்கள். எனினும் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இருந்து நான் மக்களுக்கு சேவையாற்ற பிரதி அமைச்சராக வந்துள்ளேன். எதிர்காலத்தில் இவ்வாறு கட்சி தாவுவோருக்கு இடமிருக்காது என வசந்த சேனநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


### விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= - 35.000/=வரை தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

077 792 0278, 077 628 9655 (9513)

### வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சீ-9913)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

### பெயர் மாற்றம்

மணறபுலம், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி எனும் முகவரியையும் 903193930V எனும் தேசிய அடையாள அட்டையையும் கொண்ட சிவலிங்கம் சிபஸ் ஆகிய நான் இன்று தொடக்கம் சிவலிங்கம் சுபாஸ் என பெயர் மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என அறியத்தருகின்றேன். (9533)

உண்மையுள்ள:-எஸ்.சுபாஸ்

### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 41 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.COM/ அரச தொழில்<br>தொ.இ: B/4102 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 37 1/2 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4101 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC, PGDE, HNDE/ ஆசிரியர்<br>தொ.இ: B/4107 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BCA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4103 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 34 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4108 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 30 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/4104 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 49 3/4 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: B/4109 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 46 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/4105 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

### சர்வதேச தரத்திலான தொழில்நுட்பக் கற்கைநெறிகளE யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆரம்பம்.....

பெரும்பாலான மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ➢ க.பொ.த உயர்தர கணித பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது பொருத்தமான NVQ 4 தகைமை உடைய மாணவர்களுக்கான பாடநெறிகள்
  - Higher National Diploma in Building Services Technology
  - Higher National Diploma in Construction Technology
  - Higher National Diploma in Farm Machinery Technology
  - Higher National Diploma in Mechatronics Technology
  - Higher National Diploma in Production Technology
- ➢ க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது பொருத்தமான NVQ 4 தகைமை உடைய மாணவர்களுக்கான பாடநெறிகள்
  - Higher National Diploma in Farm Machinery Technology
  - Higher National Diploma in Food Technology

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 23.02.2015**

**Leads to B.Tech Degree**

**வயதெல்லை:- 31.12.2014 இல் 29 வயதிற்குட்பட்டோர்**
**அனைவருக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பாடநெறி**
**அரசமானிய அடிப்படையிலான பாடநெறிக் கட்டணங்கள்**
**தவணை அடிப்படையில் கட்டணம் செலுத்துவதற்கான வசதிகள்**
**சமுர்த்தி பயனாளிகளுக்கு பாடநெறிக் கட்டணங்கள் இலவசம்.**

மின்னஞ்சல;: applications2015ucj@gmail.com

| கற்கைநெறி | காலம் | பாடநெறிக் கட்டணங்கள் |
| --- | --- | --- |
| அடிப்படைக் கற்கைநெறி(Foundation) | 6 மாதங்கள் | இலவசம். |
| NVQமட்டம் 5 (Diploma) | 12 மாதங்கள் | ரூபா 30,000.00 |
| NVQ மட்டம் 6 (Higher Diploma) | 12 மாதங்கள் | ரூபா 30,000.00 |
| கைத்தொழிற்பயிற்சி (On the Job Training in Industries) | 6 மாதங்கள் | இலவசம். |

மேலதிக தொடர்புகளுக்கு:தொலைபேசி இல: 021-221 7792
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி,
இல-17, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.


UNIVERSITY COLLEGE

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
நெடுஞ்சாலைகள்,உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

UNIVOTEC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரியனைச் சந்தித்த பாலு!



பாலுவுக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை. "தூரமா இருக்கிற சூரியனை, ஒரு நாள் பக்கத்துல போய் பார்த்தா என்ன?' என்று யோசித்தான். சூரியன் கிட்ட எப்படிப் போகணு ம்னு அவனுக்குத் தெரியலை.

ஒரு நாள் ராத்திரி, அம்மா கிட்ட இந்தக் கேள்வியைக் கேட் டான். அவங்களுக்கும் தெரியலை. ஆனா, ஏதாவது பதில் சொல்ல ணுமே? அதனால, "சூரியன் பக்க த்துல வர்ற நேரம் பார்த்து, பார்க்க லாம்'னு சொன்னாங்க.

பாலு அதை நம்பினான். தின மும் வெளியே வந்து, சூரியன் பக்கத்தில் வந்திருக்கா?' எனத் தலையைத் தூக்கிப் பார்ப்பான். அது எப்பவும் உயரத்திலேயே இருக்கும். ஆனாலும் பாலு, நம்பி க்கையை விடவில்லை.

பாலு வீட்டுக்குப் பக்கத்துல, ஒரு மாமரம் இருந்தது. ரொம்பப் பெரிய மரம். உயரமாக வளர்ந்து, அகல மாக கிளைகளைப் பரப்பி, பார்க் கவே பிரமாண்டமாக இருக்கும். பாலுவும் நண்பர்களும் அங்கே தான் விளையாடுவாங்க. நண்பர் கள் இல்லாதபோதும், பாலு அந்த மாமரத்தின் கீழே விளையாடிட்டு இருப்பான்.

அன்றைக்கு பாலுவுக்கு விடு முறை. அம்மா செஞ்ச இட்லியைச் சீக்கிரமே சாப்பிட்டுட்டு, மாமரம் இருந்த இடத்துக்கு வந்தான். நண் பர்கள் யாரும் வரலை. கீழே இருந்து பார்க்கும்போது, மாமரத்து க்கு மேல சூரியன் இருக்கிறது மாதிரி தெரிஞ்சது. ஆஹா, அம்மா சொன்னமாதிரி சூரியன் பக்கத்தில் வந்திருக்கு எனச் சந்தோஷப்பட்டு, மாமரத்துல ஏறப் பார்த்தான். பாலு சின்னப் பையன்தானே? அவனால் அந்த மரத்தில் காலைவெச்சு ஏற முடி யலை.

ரெண்டு அடி ஏறுவதும் சறுக்கு வதுமாக இருந்த பாலுவைப் பார் த்த மாமரத்துக்கு, பாவமா இருந்து ச்சு. தன்னோட ஒரு கிளையை, பாலுகிட்டே கொண்டுவந்துச்சு. பாலு, கிளையைப் பிடிச்சுக்கிட்டதும் விசுக் என மேலே போச்சு.

பாலு, மரத்து உச்சிக்கு வந்து ட்டான். ஆனா, கீழே இருந்து பார்த்தப்ப பக்கத்திலிருந்த சூரியன், இப்போ அதைவிட தூரமா இருந்து ச்சு. பாலு அழ ஆரம்பிச்சான். அது தான் மேலே வந்துட்டியே ஏன் அழறே? என்று மாமரம் கேட்டு ச்சு.

நான் சூரியனைப் பார்க்கத்தான் மேலே ஏறினேன். ஆனா, அது எட்டாத தூரத்தில் இருக்கே. என்ன பண்றது? என்று இன்னும் சத்த மாக அழுதான் பாலு. மரத்துக்குக் கஷ்டமா இருந்துச்சு. சரி சரி அழாதே. என்கிட்ட நிறைய மாம்பழங்கள் இருக்கு. அதைச் சாப்பிடு. என் கழுகு நண்பன் கொஞ்ச நேரத்துல வருவான். அவன், ரொம்ப உயரத் துல பறக்கிறவன். மலைப் பக்கம் போறவன். மலை உச்சியில இரு ந்து சூரியன் பக்கமாக இருக்கும் என்றது மாமரம்.

பாலு, சந்தோஷமாக பழங்க ளைப் பறிச்சு சாப்பிட ஆரம்பிச்சான். கொஞ்ச நேரத்துல கழுகு வந்துச்சு. அது ரொம்பப் பெருசா இருந்துச்சு. மரம், கழுகுக்கிட்டே விஷயத்தைச் சொல்லிச்சு. அதற்கு கழுகு, நான் உன்னை மலை உச்சிக்குக் கூட்டி ட்டுப் போறேன். அங்கே, நிறைய மேகங்கள் வரும். அவங்ககிட்டே உதவி கேட்டால், சூரியனைச் சந்தி க்க ஏற்பாடு செய்வாங்க. சீக்கிரம் பார்த்துட்டு வந்துடு. மறுபடியும் இங்கேயே கூட்டிட்டு வந்து விட்டு டுறேன். என் மேலே ஏறிக்கோ எனச்சொல்லி, பெரிய சிறகுகளைப்



பட பட என அடித்துக் கொண்டது. பாலு, கழுகு மேலே ஏறினான். அது வேகமாப்பறந்தால், முதுகை கெட்டியாப் பிடிச்சுக்கிட்டு அப்படியே படுத்துக்கிட் டான். ரொம்பப் பயமா இருந்துச்சு. வெளியே காட்டிக்கலை. கழுகு, பத்திரமா அவனை மலை உச்சியில இறக்கி விட்டு டுச்சு.

அதோ, மேகங்கள் வருது. அவங்ககிட்டே கேளு. சூரியனைப் பார்த்து ட்டுத் திரும்பி வந்ததும் எனக்குக் குரல் கொடு. நான் இங்கே பக்கத்தில் தான் பறந்துக் கிட்டு இருப்பேன் என்றது கழுகு.

பல்வேறு வடிவங்க ளில் அந்தப் பக்கமாக வந்த மேகங்களிடம் விஷயத் தைச் சொன்னான் பாலு. முயல் வடிவில் இருந்த ஒரு மேகம், நான், உன்னை சூரியனிடம் கூட்டிட்டுப் போறேன். என் மேலே ஏறிக்கோ என்றது. பாலு, ஒரே தாவலில் முயல் மேக த்தின் மேலே ஏறிகிட்டான்.

காற்று நண்பனின் உதவியால், சூரியனை நோக்கி நகர்ந்துச்சு முயல் மேகம். சூரியனுக்குக் கொஞ சம் நெருக்கத்தில் போதும், வெப் பம் தாங்காமல் பாலு அலறி னான்.

தலையைக் குனிஞ்சு பார்த்த சூரியன், சட்டெனத் தன் வெப்பத் தைக் குறைச்சு, அவனைத் தன் வீட்டுக்குள்ளே இழுத்துப் போட்டுக் கிச்சு. அங்கே ரொம்பக் குளிர்ச் சயா இருந்துச்சு. சூரியன், பாலுவைப் பற்றி ஆசையாக விசாரிச்சு, குடிக் கிறதுக்கு பழச்சாறு கொடுத்துச்சு. சூரியனின் வீடு அழகாக இருந்து ச்சு. பாலு அங்கே ஆசை தீர விளையாடினான். சூரியனைப்பற்றி நிறைய விஷயங்களை அதனி டமே கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டான். ரொம்ப நேரம் ஆனதும், சரி சூரி யனே, நான் வீட்டுக்குப் போகணும். அம்மா தேடுவாங்க என்று சொன் னான். நல்லது. இனிமேல் எப்போ என்னைப் பார்க்க நினைச் சாலும் வா. எனக்கு ஒரு நல்ல நண்பன் கிடைச்சிருக்கே எனச் சொல்லி, அவனை ஒரு யானை மேகத்தின் மேலே ஏற்றிவிட்டது.

யானை மேகமே, அந்த முயல் மேகம் எங்கே? எனக் கேட்டான் பாலு. அந்த முயல் மேகத்தோடு, ஒரு சிங்க மேகம், ஒரு ராக்கெட் மேகம, ரெண்டு அணில் மேகங் கள்சேர்ந்துதான்நான்உருவானேன். கவலைப்படாதே, நான் உன்னை மலை உச்சிக்குக் கொண்டு போய் சேர்க்கிறேன் என்றது யானை மேகம்.

யானை மேகத்தின் உதவி யோடு மலைக்கு வந்த பாலு, கழு கின் மேலே ஏறி, மாமரத்திடம் வந்தான். கழுகுக்கும் மாமரத்துக் கும் நன்றி சொன்னான். அவற் றைப் பிரிய அவனுக்கு மனசு வரலை. இரண்டும் அவனைத் தட்டிக் கொடுத்து, நீ எப்போ நினை ச்சாலும் இங்கே வரலாம். அம்மா தேடிட்டு இருப்பாங்க சீக்கிரம் போ என்று அனுப்பினாங்க.

பாலு, பத்திரமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். சூரியனைப் பார்த்ததை அம்மாவிடம் சொன் னான். சரி சரி சாப்பிட வா, அப்புறம் பேசிக்கலாம் என்ற அம்மாவின் குரலில் நம்பிக்கையே இல்லை.

பாலு கனவு கண்டிருப்பான் என நினைச்சுக்கிட்டாங்க போல. பாலு சாப்பிடப் போகும் முன் ஜன் னல் வழியே பார்த்தான். வான் உச்சியிலிருந்த சூரியன், அவனைப் பார்த்து சிரிச்சது.

02.2015
16

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1822 - ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக் கன் குடியரசை முற்றுகையிட்டது.
- 1885 - முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடை ந்தனர்.
- 1895 - வில்லியம் மோர்கன் volleyball ஐக் கண்டுபிடித்தார்.
- 1897 - பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்த னர்.
- 1900 - டேவிஸ் கோப்பை டெனிஸ் பந்தயம் ஆரம்பிக்கப் பட்டது.
- 1904 - போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.
- 1942 - ஐக்கிய அமெரிக்காவில் பகலொளி சேமிப்பு நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1962 - பொதுநலவாய அமைப்பினுள் ஜமேக்கா விடுதலை பெற்றது.
- 1965 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப் பிரிவு முதற்தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.
- 1969 - போயிங் 747 விமானத்தின் முதற் சோதனை மேற் கொள்ளப்பட்டது.
- 1971 - அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர் களுடன் பூமி திரும்பியது.
- 1975 - சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பியது.
- 1986 - ஹேலியின் வால்மீன் சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி.மீ தூரத்தில் வந்தது.
- 1991 - லித்துவேனியாவில் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தார்கள்.
- 1996 - ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது 18 மாத யுத்த நிறுத்த உடன்பாட்டினை முறித்துக்கொண்ட சில மணி நேரத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1773 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்கா வின் 9 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1841)
- 1910 - ஜாக் மொனோட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1976)
- 1940 - ஜே. எம். கோட்ஸி, நோபல் பரிசு பெற்ற தென்னா பிரிக்க எழுத்தாளர்
- 1943 - ஜோசப் ஸ்டிக்லிட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரி க்கப் பொருளியலாளர்

**இறப்புகள**

- 1881 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய நாவலாசிரியர் (பி. 1821)
- 1979 - டெனிஸ் காபோர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)
- 1984 - யூரி அந்திரோபொவ், சோவியத் ஜனாதிபதி (பி. 1914)
- 1994 - ஹ்வார்ட் டெமின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1934)
- 2001 - ஹேர்பேர்ட் ஸைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர் (பி. 1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...குழந்தைகளை வைத்துக் கொண்டு செய்வதறியாது திகைக்கிறாள். அதே ஆஸ்பத்திரியில் பணக்காரர் ஒருவரின் மனைவியும் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறாள். அவளுக்கு ஏற்கனவே இரண்டு முறை குழந்தை இறந்தே பிறந்ததால், இம்முறையாவது குழந்தை உயிருடன் பிறக்க வேண்டுமே என்ற கவலை. ஆனால் இம்முறையும் குழந்தை இறந்தே பிறக்க, அது தெரியாமல் அவள் மயக்க நிலையில் இருக்கிறாள்.

சகாயமேரியிடம் இருக்கும் இரட்டைக் குழந்தைகளில் ஒன்றை பணக்காரர் கேட்கிறார். தனது குழந்தை உயிருடன் இருக்கிறது என்று தெரிந்தால் மட்டுமே மனைவியை உயிரோடு பார்க்க முடியும் என்று கண்களில் நீர் மல்க அவர் சொன்னதால், இரண்டு ஆண் குழந்தைகளில் ஒன்றை பணக்காரரிடம் சகாய மேரி கொடுக்கிறாள்.

சகாயமேரியின்ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு, அவளிடம் இருக்கும் மற்றொரு குழந்தையை வளர்க்க மாதந்தோறும் பணம் அனுப்பி வைக்கிறார். சகாயமேரியின் பொறுப்பில் வளரும் குழந்தை ஜான் என்ற பெயரிலும், பணக்காரரிடம் வளரும் குழந்தை அருண் என்ற பெயரிலும் வளர்கிறார்கள். ஜான் அதிரடி, அடிதடி, ஜாலி என்று உருவாக, அருண் மேற்படிப்புக்காக அமெரிக்கா போகிறான்.

**பிறந்த நாள்**

படிப்பை முடித்து ஊருக்குவரும அருண் தனது 25ஆவது பிறந்த நாளை தடபுடலாக கொண்டாடுகிறான். இந்த விழாவுக்கு கள்ளச் சாராய தலைவனின் அடியாளாக இருந்து இப்போது தொழிலதிபர் அந்தஸ்தில் இருக்கும் சங்கிலிமுருகனும் அழைக்கப்பட்டு இருக்கிறார். பிறந்த நாள் கேக்கை வெட்ட அருண் கத்தியை கையில் எடுக்கும் போது, கேக்கில் ஒரு காட்சி அருண் கண்ணுக்கு தெரிகிறது. அலெக்ஸ் பாண்டியனை கள்ளச்சாராய கும்பலின் தலைவன் செந்தாமரை கத்தியால் குத்துவதாக விரியும் அந்தக் காட்சியை பார்த்த அருண, ஆவேசமாகிறான்.

தொழிலதிபர் சங்கிலிமுருகனின் சட்டையைப் பிடித்து இழுத்து உலுக்கியவன், எங்கேடா உங்கபாஸ்? என்று கேட்கிறான். இந்த தகவல் செந்தாமரைக்குப் போக, அவர் துப்பறிந்து அலெக்ஸ் பாண்டியன் சாயலில் இருக்கும் அருண், பணக்காரரின் மகனல்ல, அலெக்ஸ் பாண்டியனின மகனே என்பதை அறிந்து கொள்கிறார். இதனால் அவனையும் கொன்று விட திட்டம் தீட்டுகிறார். இதற்குள் அருணுக்கும் தனக்குள் தோன்றிய அந்த திடீர் உணர்வுக்கு விடை கிடைக கிறது. தங்கள் அலுவலக பொறுப்பை மேற்கொள்ளும் அருண், சகாய மேரி என்ற பெணணுக்கு தனது அப்பா மாதா மாதம் பணம் அனுப்பி வரும் தகவலை தெரிந்து கொள்கிறான். அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ளும் பொருட்டு சகாய மேரியின்இருப்பிடம் வருகிறான. அங்கே வந்த பிறகு தான், அலெக்ஸ் பாண்டியனுக்கு பிறந்த இரண்டு குழந்தைகளில் தானும் ஒருவன் என்ற உண்மை தெரிய வருகிறது.



57


நீ மீசையை முறுக்கினால் நான் பயந்து விடுவேனா? பந்தாடி விடுவேன் என்று செந்தாமரையிடம் கர்ஜிக்கிறார். ரஜினி-( மூன்று முகம்)

**பழிக்குப்பழி**

இரட்டை சகோதரர்கள் தங்கள் தந்தையை கொன்ற செந்தாமரை கும்பலை பழிவாங்க புறப்படுகிறார்கள். இதில் ஜான் முந்திக்கொண்டு, கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த செந்தாமரையின் ஆட்களை வெறியுடன் கொல்கிறான். விபரீதம் உணர்ந்த செந்தாமரை, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஜானை கத்தியால் குத்தி சாய்க்கிறார். அந்தக் கத்தியை பிடுங்கி செந்தாமரையின் வயிற்றில் கத்தியை பாய்ச்சுகிறான் ஜான். செந்தாமரை உயிரை விட்டு விட, குற்றுயிராய் கிடக்கும் ஜானை தனது மடி மீது தூக்கி வைத்து கதறுகிறான் அருண். தனது தந்தையை கொன்ற கும்பலை பழிதீர்த்த நிம்மதியில், தம்பி அருணின் மடியில் உயிரை விடுகிறான், ஜான்.

மூன்று வேடங்களில் நடித்த ரஜினிக்கு இரண்டு ஜோடிகள். அலெக்ஸ் பாண்டியனுக்கு ராஜலட்சுமி, அருணுக்கு ராதிகா. ஜானுக்கு ஜோடி இல்லை. வேகமும், விறுவிறுப்பும் நிறைந்த இந்தப படம் மகத்தான வெற்றி பெற்றது. மூன்று வேடங்களையும், வெகு எளிதாக ஊதித்தள்ளி, ரசிகர்களைக் கவர்ந்தார், ரஜினி.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்



**வைரமுத்து- 79**

.....பிள்ளபெற இன்னும் பத்து நாள் இருக்கிங்கிற நம்பிக்கையில அகமலையில விறகெடுத்துத் தலையில சொமந்து வறட்டாறு தாண்டி வந்துக்கிட்டிருக்கா நெறமாசக்காரி.

எங்கிட்டிருந்தாலும் ஒரு சாரக் காத்து வந்து லேசா ஒரு தட்டுத் தட்டினா ஓடைஞ்சு ஒழுகிரும் மேகம்.

அதுக்கான அறிகுறி கண்டதும் ஓடி ஒளிஞ்சு போச்சு ஆடுமாடு மேய்க்கிற கூட்டம்.

கண்ணுக் கெட்டின மட்டும் காக்கா குருவி கழுகு தவிர எதும் தட்டுப்படல.

மேல ஆகாயம்.

கீழ பூமி தலையில வெறகு வகுத்துல பிள்ள.

இடிக்கப் போறேங்குது மேகம்.

அடிக்கப் போறேங்குது மழை.

கிழிச்சும் தைப்பேன் தச்சும் கிழிப்பேன்னு கிறுக்குப்புடிச்சு அலையுது மின்னலு.

சூராம் புதருக்குள்ள ஒரு சூறாவளி சுத்தி வேரோட புடுங்க ஒரு இத்துப் போன மரமிருக்கான்னு விசில் அடிச்சு விசாரிச்சுக்கிட்டே வருது ஒரு கடுங் காத்து.

ஒத்தையில நிக்கிறா கருவாச்சி அத்துவானக் காட்டுல.

என்னத்தச் சொல்ல..?

எடுத்திருச்சய்யா இடுப்பு வலி.

காடு நடுக்காடு.

காலம் சயாங்காலம்.

ஆகாயத்துல சூரியனையுங் காணோம்; அக்கம் பக்கம் ஆளுகளையும் காணோம்.

என்ன பண்ணுவா பாவம் இடுப்புவலி எடுத்தவ?

யாத்தே! என்னியக் காப்பாத்துங் கன்னு உசுர் கிழிய ஓங்கி கத்துனாலும் இந்த ஓசை கேக்குற ஒலி வட்டத்துக்குள்ள உசுருக ஏதும் இல்ல.

வெலாப்பக்கம் மின்னல் சுளீர் சுளீர் ன்னு வெட்டி வெட்டிச் சுண்டுது.

இடுப்புக்குள்ளயரோ குடியிருந்துக்கிட்டே கோடலி எடுத்து வெட்டுற மாதிரியிருக்கு.

தடால்ன்னு தூக்கித் தரையில எறிஞ்சா வெறக.

பிள்ளபெறக்க ஒரு வாரம் பத்து நாள் ஆகும்ன்னு கெழவிக சொன்னது தப்பாப் போச்சே.



இந்தவலி பொய் வலியாத் தெரியலையே.

உசுரக் கிண்டிக் கெழங்கெடுக்கிற வலியாத் தெரியுதே! கடவுளே என்னியக் காப்பாத்திரு.

தாயும் பிள்ளையும் தனித் தனின்னு ஆக்கிரு.

எங்க போயி விழுகிறது?

நிக்கிற பூமி நெருஞ்சிக்காடு.

கெழக்க வறட்டாறு மேற்க அகமலை வடக்க இண்டம்பு தர்க்காடு.

தெக்க ஒரு கெணத்து மேடு.

அங்கதெரியுது ஒரு காவக் குடிசை.

ஒரு முந்நூறு அடி தூரந்தான் இருக்கும்.

முந்நூறு மைலாத் தெரியுது இடுப்பு வலிக்காரிக்கு.

இடுப்புல கையவச்சு அழுத்தி வகுத்துல சிலுவை சொமந்து ஒரு பக்கமா ஒருக்களிச்சு ஒரஞ்சாஞ்சு நெருஞ்சி முள்ளு வழிநடந்து காவக் குடிசைக்குள்ள போயி விழுந்து போனா.


சின்னக் குடிசை குட்டையன் கூட அதுல குனிஞ்சுதான் போகனும்.

அகத்திக் கம்புகள ஊடுமரமா வச்சுத் தென்னங்கீத்துகள்ல கட்டி வச்ச குடிசை.


சாமவைக்கோலப் பரப்பியிருக்கு தரையில இத்த சாக்கு ஒண்ணு விரிச்சுக் கெடக்கு அதுக்கு மேல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களது அணி வகுப்பு மரியாதையையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களது அணி வகுப்பு மரியாதையையும் அருட்தந்தை யூட்நிக்ஷன் அடிகளார் மாணவருக்கு பரிசில் வழங்கியதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பேராசிரியர் டாக்டர் வேலுப்பிள்ளையின் சைவ சமயம் அன்றும் இன்றும் இங்கும் நூல் வெளியீட்டு விழாவிலும் நூலின் பதிப்பாசிரியரிடமிருந்து விரிவுரையாளர் கே.செந்தில்குமரன் சிறப்பு பிரதி பெற்றுக் கொள்வதையும் நூல் மதிப்புரை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரனை நூலின் பதிப்பாசிரியர் விரிவுரையாளர் கௌரிகாந்தன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.





ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பையும் மற்றும் தரம் ஒன்று மாணவர்களின் விநோதவுடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.




வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா கடந்த வெள்ளிக்கிழமை சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)





பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்ட போது...

## நிகழ்வின் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாடாளுமன்றத்திலும் இனப்படுகொலைத் தீர்மானம்


## தி.க. தலைவர் வீரமணி கோரிக்கை

(டில்லி)

**இலங்கையில் நடைபெற்றது அப்பட்டமான இன அழிப்புப் படுகொலை என்பதை வலியுறுத்தி இந்திய அரசும் நாடாளுமன்றத்தில் ஒரு தனி தீர்மானமே கொண்டுவர முன்வர வேண்டும் என்று திராடவிடர் கழக தலைவர் கி.வீரமணி கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் நடைபெற்றது அப்பட்டமான இனப்படுகொலை என்றும், ஐ.நா. வெளியில் இருந்து சுதந்திரமானவர்களை வைத்து அதை விசாரணை செய்து குற்றவாளியான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், அவரது கூட்டத்தையும் தண்டிக்க வேண்டும் என்று இலங்கையின் வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தலைமையிலான அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது அனைத்து மக்களாலும் வரவேற்று பாராட்டக்கூடியது ஆகும். இந்திய அரசும், இலங்கையில் நடைபெற்றது அப்பட்டமான இன அழிப்பு படுகொலை என்பதை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் ஒரு தனி தீர்மானமே கொண்டுவர முன்வர வேண்டும். எதிர்வரும்



தமிழக சட்டசபை கூட்டத்தொடரில், இப்படி ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவரவும், வடமாகாண அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் கருத்தை ஆதாரமாக்கி, தமிழர் இனப்படுகொலை பற்றி ஐ.நா வின் சுதந்திரமான ஒரு விசாரணை குழு நடத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று அவர் தனது அறிக்கையில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்

## சரத்குமார் வலியுறுத்து

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி ஏற்றபின் முதன் முறையாக இந்தியாவிற்கு வந்து பிரதமர் நரேந்திரமோடியை சந்திக்க இருக்கிறார். மைத்திரியின் வெற்றிக்கு தமிழர்களின் வாக்குத்தான் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர்.சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரின் வருகையையொட்டி தமிழக மீனவர்களின் 87 படகுகள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றன என்பது மகிழ்ச்சியான செய்தி என்றாலும், இனிமேல் தமிழக மீனவர்களுக்கு எந்தவித அச்சுறுத்தலும், படகுகள் கைப்பற்றப்படுதல் போன்ற சம்பவங்களும் நடைபெறாது என்ற உத்தரவாதத்தை இலங்கை ஜனாதிபதியிடமிருந்து பாரத பிரதமர் பெற வேண்டும்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் விதமாக இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்த வேண்டும். அவரின் வருகை தமிழர் வாழ்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் விதமாக அமைய வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கைகளை பிரதமர் மோடி செயற்படுத்த வேண்டும். இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறிசேன இந்தியா வருவதை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. வெளியளவில் நட்பு நாடாகவும், மனத்தளவில் தமிழர் விரோத அரசாகவுமே நாடகமாடும் இலங்கை அரசு தமிழர்களுக்கு எந்த காலத்திலும் நன்மை பயக்கும் அரசாக இருந்ததில்லை. அவரின் வருகையால் தமிழர்களுக்கு எத்தகைய நம்பிக்கையும் ஏற்பட போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு தடை விதிக்க இந்தியா முடிபு

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு மற்றும் அதைச் சார்ந்த மற்ற அமைப்புகளுக்கு தடைவிதிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

சட்டவிரோத செயல்கள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் அதன் சார்பு அமைப்புகளான ஐ.எஸ்.ஐ.எல்., ஐ.எஸ் ஆகியவற்றை தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கும் அறிக்கை விரைவில் வெளியாகும் என அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

மும்பை, பெங்களூர், ஐதராபாத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பில் சேர ஈராக் - சிரியா செல்கின்றனர். அவர்களில் ஒருவர் கடந்த ஆண்டு இறுதியில் நாடு திரும்பினார். மற்ற 3 பேர் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இது நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்று உளவுத்துறையின் முன்னாள் தலைவர் ஆசிப் இப்ராஹிம் அண்மையில் எச்சரிக்கை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜன்லோக்பால் சட்டத்தை நிறைவேற்ற உறுதியளிப்பு

டில்லியின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள அர்விந்த் கெஜ்ரிவால் ஜன்லோக்பால் சட்டத்தை நிறைவேற்ற உறுதியளித்துள்ளார்.

அந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத காரணத்தால் சரியாக ஓராண்டுக்கு முன்னர் அவர் தலைமையிலான அரசு பதவி விலகியது.

அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து, கெஜ்ரிவால் தலைமையிலான அரசு பொதுமக்கள் முன்னிலையில் ராம் லீலா மைதானத்தில் பதவியேற்றது.

மனீஷ் சிசோடியா துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். டில்லி மக்கள் தங்களுக்கு மிகப் பெரிய வெற்றியை அளித்திருப்பதன் மூலம், அவர்களின் எதிர்ப்பார்ப்பு பன்மடங்காக அதிகரித்துள்ளதை தன்னால் உணர முடிகிறது என்று பதவியேற்பு விழாவில் அர்விந்த் கெஜ்ரிவால் தெரிவித்தார். (இ-5)

# திடீரென கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் உத்தரப்பிரதேசத்தில் 13பேர் மரணம்

உத்தரப்பிரதேச மாநிலம் சந்தவ்லி மாவட்டத்தில் நேற்று அதிகாலை கட்டடம் இடிந்து விழுந்ததில் அங்கு தங்கியிருந்த 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

கட்டடம் இடிந்து விழுந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்த அருகில் வசிக்கும் பொதுமக்கள் உடனடியாக தீயணைப்புதுறைக்கு தகவல் அளித்தனர். விரைந்து வந்த தீயணைப்பு படையினர் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்த சடலங்களை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். யாரேனும் உயிருடன் சிக்கி இருக்கிறார்களா? என்று தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கனரக இயந்திரங்கள் கொண்டு இடிந்து விழுந்த கட்டடத்தின் பகுதிகளை அப்புறப்படுத்தும் பணியில் மீட்பு படையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கட்டடம் கட்டுமான பணிகள் நடந்துவந்த கட்டடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபத்து ஏற்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று அருகில் வசிக்கும் குடியிருப்பு வாசிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டட விபத்து குறித்து சந்தவ்லி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். காயம் அடைந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாரதச் செய்தி

# பன்றிக்காய்ச்சல் காரணமாக இராஜஸ்தானில் 12 பேர் பலி!

இராஜஸ்தானில் கடந்த 2 நாட்களில் பன்றிக் காய்ச்சலுக்கு மேலும் 12 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் இம்மாநிலத்தில் இந்நோய்க்கு பலியானவர்கள் எண்ணிக்கை 142 ஆக உயர்ந்துள்ளது.

பன்றிக் காய்ச்சலுக்கு இம்மாநிலத்தின் பல்வேறு வைத்தியசாலையில் நேற்று முன்தினம் 7 பேர் இறந்தனர். இந்நிலையில் ஜெய்ப்பூர் எஸ்.எம்.எஸ். வைத்தியசாலையில் 3 பேர், ஜோத்பூர் அரசு வைத்தியசாலையில் இருவர் என நேற்று 5 பேர் உயிரிழந்தனர்.

இராஜஸ்தான் வைத்திய மற்றும் சுகாதார இயக்குநர் டாக்டர் பி.கே. மனா கூறும் போது, இந்த ஆண்டு பன்றிக் காய்ச்சல் பரிசோதனை செய்து கொண்டவர்களில் 1881 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் இதுவரை 142 பேர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர்.

மாநிலத்தில் அதிகபட்சமாக ஜெய்ப்பூரில் 23 பேர் இறந்துள்ளனர். இதைத் தொடர்ந்து ஆஜ்மீரில் 22, பார்மர், ஜோத்பூரில் தலா 13 பேர் இறந்துள்ளனர் என்றார்.

உத்தரகாண்ட் மாநிலத்திலும் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. டேராடூன் நகரில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 50 வயது நபர் ஒருவரை கடந்த வியாழக்கிழமை வைத்தியசர்லையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பலனின்றி அன்றிரவு உயிரிழந்தார்.

இம்மாநிலத்தில் இந்த ஆண்டு பன்றிக் காய்ச்சலுக்கு பலியான 2ஆவது நபர் இவர் ஆவார். இதற்கு முன்பு ஹரித்துவார் மாவட்டத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். (இ-5)

# இந்தியாவில் ஊழலற்ற மாநிலமாக எதிர்காலத்தில் டில்லி இருக்கும்

## முதல்வர் கெஜ்ரிவால் தெரிவிப்பு


இனி ஊழலற்ற மாநிலமாக டில்லி இருக்கும் என்று, டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் டில்லி முதல்வராக பதவி ஏற்றுக்கொண்ட அர்விந்த் கெஜ்ரிவால், பதவியேற்பு க்குப் பின்னர் உரையாற்றினார். சுமார் ஒரு இலட்சம் பேர் இந்த பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

டில்லி பொலிஸார் மற்றும் துணை இராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அர்விந்த் கெஜ்ரிவால்மற்றும் 5 அமைச்சர்களுக்கு டில்லி துணை நிலை ஆளுநர் நஜீப்ஜங் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்பீட்டுப் பிரமாணமும் செய்து வைத்தார். எந்தெந்த அமைச்சர்களுக்கு எந்தெந்த இலாகா என்பது இன்னமும் ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட கெஜ்ரிவால், ஊழலற்ற மாநிலமாக டில்லியை மாற்று



வேன் என்றும், அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இலஞ்சம் பெறுவது தெரிந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன ஆகும் ஈழப்பிரச்சினை?

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு முதல் வெளிநாட்டுப் பயணமாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இந்தியா வந்தார். கடந்த காலங்களில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்சே இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் போராட்டங்கள் நடப்பது வழக்கமாக இருந்தது.

இப்போது மைத்திரிபாலவின் வருகையை தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் பிரதிநிதியாகக் கருதி எதிர்ப்பதா, அல்லது ராஜபக்சதான் இனப்படுகொலைக்குக் காரணம் என்பதால் அவர் வருகையை மட்டுமே எதிர்க்கவேண்டும் என்று பொருள் கொள்ளலாமா என்று கேட்டால் தெளிவான பதில்களை கண்டடைய முடியாது.

எப்படியிருந்தபோதிலும் ராஜபக்சவின் தோல்விக்குப் பிறகு ஈழ ஆதரவுப் போராட்டத்தின் வீரியம் சற்று குறைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இறுதிப் போரில் இலங்கை அரசின் இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை தேவை, தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இலங்கை இராணுவம் தமிழர் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும், தமிழர்களுக்கான அரசியல் தீர்வை தமிழர்களே தீர்மானிக்க வேண்டும். இவை ஈழ ஆதரவாளர்களின் கோரிக்கைகள். ஆனால், இவற்றை வலியுறுத்திய போராட்டங்கள் இப்போது சற்று மங்கிப்போயிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். ராஜபக்சவின் தோல்வியோடு எல்லாம் முடிந்துவிட்டதா?

'இல்லை' என்கிறது வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட 'இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணை தேவை' என்ற தீர்மானம். இந்தத் தீர்மானம் குறித்தும் தொடர்ச்சியாக ஈழத்தமிழர் பிரச்சினைகளின் தீர்வு நோக்கியும் தமிழகச் சூழலிலும் இந்தியச் சூழலிலும் என்ன மாதிரியான அணுகுமுறைகள் இருக்கின்றன என்று பார்ப்போம்.

வழக்கம் போல வடக்கு மாகாண சபையில் முதல்வர் விக்கினேஸ்வரன் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஆதரித்துள்ள வைகோ 'தமிழகச் சட்டசபையிலும் இதை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்று தெரிவித்திருக்கிறார். திருமாவளவனும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அறிக்கைவிட்டிருக்கிறார். சீமான், நெடுமாறன்போன்றவர்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இது சர்வதேச அளவிலோ இந்திய அளவிலோ கவனம் பெறுவதற்கு இவர்களின் ஆதரவு மட்டும் போதாது. தமிழக அரசு மற்றும் இந்திய அரசின் நிலைப்பாடு என்ன என்று தெரியவேண்டும்.



வைகோவும், திருமாவளவனும் வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை ஆதரிப்பதில் ஆச்சர்யம் இல்லை. ஆனால் யாரும் எதிர்பாராதவாறு எதிர்முகாமிலிருந்து ஓர் ஆதரவுக்குரல் எழுந்திருக்கிறது. அது ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் குரல். அவரும 'இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும்' என்று அறிக்கை விட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களாலும், ஈழ ஆதரவாளர்களாலும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது காங்கிரசும் தி.மு.க.வும்தான். இனப்படுகொலை நடந்தபோது மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியிலிருந்தது இவர்கள்தான். மன்மோகன் அரசு இருந்தபோது, ராஜபக்சவும் இலங்கை ஜனாதிபதியாக இருந்தபோது இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணையை வலியுறுத்தாமல் இப்போது ஈ.வி.கே.எஸ்

> "புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால அரசிடம் சில நல்ல அறிகுறிகள் தெரிகின்றன. தமிழக மீனவர்களின் படகுகளை விடுவித்திருப்பது ஒரு நல்ல தொடக்கம். (நல்ல வேளை மைத்திரிபால சிறிசேன சுப்பிரமணியசாமியிடம் ஆலோசனை கேட்கவில்லை) அதேபோல் யாழ்ப்பாணத்தில் விமானப்படைக்குச் சொந்தமான நிலத்தைத் தமிழர்களுக்கு வழங்குவதாகவும் இலங்கை அரசு அறிவித்திருக்கிறது. 13 ஆவது சட்டத்திருத்தம் என்பதை ஈழ ஆதரவாளர்களில் பெரும்பாலானோர் ஏற்காவிட்டாலும், 13 ஆவது சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதாக மைத்திரிபால அரசு அறிவித்திருக்கிறது. தமிழர்களுக்கு எந்த உரிமையையும் தரத் தயாராக இல்லாத ராஜபக்ச அரசோடு ஒப்பிடும்போது இது கொஞ்சம் சிறிய முன்னேற்றம்தான்."

வலியுறுத்துவதை அரசியல் சந்தர்ப்பவாதம் என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்வது? கிட்டத்தட்ட தி.மு.க.வின் நிலையும் இதுதான்.

கடந்த காலங்களில் இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க. காட்டிய ஆர்வமும் செயற்பாடுகளும் இறுதிப்போரில் அது நடந்துகொண்ட முறையில் அடிபட்டுப் போயின. ஆட்சி போனபிறகு கருணாநிதி மீண்டும் கொண்டுவந்த டெசோ அமைப்பும் ஏளனமாகத்தான் பார்க்கப்படுகிறது. இப்போது 'இலங்கை இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை தேவை' என்ற தீர்மானத்தின் மீது அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. நிலைப்பாடு என்ன என்று தெரிய வேண்டும்.

கடந்த காலங்களில் பா.ஜ.க. புலியெதிர்ப்பு அரசியலையே முன்வைத்திருக்கிறது. இந்து முன்னணி ராமகோபாலன் தொடங்கி தமிழக பா.ஜ.க. வரை இந்துத்துவவாதிகளின் குரல் விடுதலைப் புலிகளை எதிர்க்கும் ஒற்றைக் குரல்தான். அடிப்படையிலேயே அவர்களின் இந்துத்துவக் கருத்தியல் தமிழ்த் தேசியம், தனி ஈழக் கோரிக்கை ஆகியவற்றுக்கு எதிரானது.

இந்துத்துவவாதிகள் முன்வைக்கும் கலாசாரத் தேசியம், தேசிய இனப்பிரச்சினை கள், மொழிவாரித் தேசியம் ஆகியவற்றை ஏற்காது. அந்த அடிப்படையில் தொடர்ச்சியாக ஈழ எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டைத்தான் பா.ஜ.க. கொண்டிருந்தது. ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது காங்கிரஸை வீழ்த்துவதற்கான ஆயுதமாக ஈழப் பிரச்சினையை பா.ஜ.க. கையில் எடுத்துக் கொண்டது ஒரு சந்தர்ப்பவாத நிலைப்பாடு தான் என்பதை மோடி ஆட்சிக்கு வந்த எட்டு மாதங்கள் நிரூபித்திருக்கின்றன. தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் ஈழத்தமிழர்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் சுப்பிரமணியன்சாமி பேசி வருகி றார். இதை மெல்லவும் முடியாமல் விழுங்க வும் முடியாமல் தமிழக பா.ஜ.க. 'இது கட்சி யின் நிலைப்பாடு இல்லை' என்று சொல்லி வந்தாலும் தேசியத்தலைமை சு.சாமியின் கருத்துகளை மௌனமாக ஆதரித்துத்தான் வந்திருக்கிறது.

இதுமாதிரியான நிலைப்பாடுகள் குறித்து கடுமையான விமர்சனங்களை வைத்து வைகோ கூட்டணியிலிருந்து வெளியேறி விட்டார். கூட்டணியில் இருந்தாலும் பா.ம.க. தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைக்கிறது. கடந்த காலங்களில் ராஜபக்சவை நியாயப்படுத்தி காங்கிரஸ்காரர்கள் பேசிய அதே பேச்சுகளை இப்போது பா.ஜ.க.வினர் பேசிவந்தனர். இன்னும் ஒருபடி மேலே போய் 'இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே அல்ல' என்று தொலைக்காட்சி விவாதங்களில் தமிழக பா.ஜ.க.வினர் பேசத் தொடங்கியிருக்கின்றனர். எனவே, இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணை என்ற விடயத்தை இனி பா.ஜ.க. பேசாது என்றே தெரிகிறது.

கடந்த காலங்களில் பா.ஜ.க. உள்ளிட்ட இந்துத்துவவாதிகள் இலங்கைப் பிரச்சினையில் கொண்டிருந்த கடுமையான புலி எதிர்ப்பு நிலைப்பாட்டையே ஜெயலலிதாவும் கொண்டிருந்தார். ஆனால், சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸையும், தி.மு.க.வையும் வீழ்த்த, பா.ஜ.க.வைப் போலவே ஈழப்பிரச்சினை என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்தார் ஜெயலலிதா. ஆனால், அது தேர்தலோடு நின்று போகாமல் தொடர்ச்சியாக ஈழப்பிரச்னை குறித்த தீர்மானங்களைச் சட்டசபையில் நிறைவேற்றினார்.

எனவே, வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை ஆதரித்து விரைவில் கூடவிருக்கும் சட்டமன்றத்தில் ஓ.பன்னீர்செல்வம் அரசு தீர்மானம் போடுமா? என்பதை உறுதியாகச் சொல்லமுடியவில்லை. ஏனெனில் இப்போது அ.தி.மு.க.வின் தலையாய சிக்கலே ஜெயலலிதா வழக்கிலிருந்து விடுதலையாவதுதான். எனவே, ஈழப்பிரச்சினை, இனப்படுகொலை பற்றியெல்லாம் கவலைப்படுவதற்கோ கவனம் செலுத்துவதற்கோ அ.தி.மு.க.விற்கு நேரமிருக்குமா என்று தெரியவில்லை. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களால் பெரியளவு தீர்வு எதுவும் ஏற்படாது என்றாலும், அதற்கான முகாந்திரம் என்பது இருக்கத்தான் செய்கிறது.

மத்திய அரசைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. மன்மோகன் அரசின் நிலைப்பாடுதான் இன்றுவரை மோடி அரசின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. இந்தியா பயணித்திருக்கும் மைத்திரிபால சிறிசேனவிடம் ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்தோ இனப்படுகொலை குறித்தோ மோடி வலியுறுத்துவார் என்று நம்புவதற்கான முகாந்திரங்கள் இல்லை. அதே நேரத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால அரசிடம் சில நல்ல அறிகுறிகள் தெரிகின்றன. தமிழக மீனவர்களின் படகுகளை விடுவித்திருப்பது ஒரு நல்ல தொடக்கம். (நல்லவேளை மைத்திரி பால சிறிசேன சுப்பிரமணியசாமியிடம் ஆலோசனை கேட்கவில்லை) அதேபோல் யாழ்ப்பாணத்தில் விமானப்படைக்குச் சொந்தமான நிலத்தைத் தமிழர்களுக்கு வழங்குவதாகவும் இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

13 ஆவது சட்டத்திருத்தம் என்பதை ஈழ ஆதரவாளர்களில் பெரும்பாலானோர் ஏற்காவிட்டாலும், 13 ஆவது சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதாக மைத்திரிபால அரசு அறிவித்திருக்கிறது. தமிழர்களுக்கு எந்த உரிமையையும் தரத் தயாராக இல்லாத ராஜபக்ச அரசோடு ஒப்பிடும்போது இது கொஞ்சம் சிறிய முன்னேற்றம்தான். ஆனாலும் இவற்றையெல்லாம் தமிழர்கள் நம்ப முடியுமா என்ற சந்தேகமும் எழுகிறது. ஏனெனில் இலங்கை அரசின் தந்திரங்களும் தமிழர்களின் ஏமாற்றங்களும் நிறைந்த கடந்த கால வரலாற்று அனுபவங்கள் அப்படி!

ராஜபக்சவைப் பழிவாங்குவதற்காவது அவரின் அத்துமீறல்களை மைத்திரிபால அரசு விசாரிக்கிறது. அந்தப் பட்டியலில் ராஜபக்ச அரசின் போர்க்குற்றங்களில் சிலவற்றையாவது மைத்திரிபால அரசு விசாரிக்கும் என்று நம்பலாம். அதேநேரத்தில் இதைக் கண்டிப்பாக 'இனப்படுகொலை' என்று அறிவிப்பதற்கு இலங்கை அரசு ஒப்புக் கொள்ளாது. அப்படி ஒப்புக்கொண்டால் சிங்கள இனவாத அமைப்புகளைச் சமாளிக்க முடியாது, பெரும்பான்மை சிங்கள மக்களிடம் ஆதரவை இழந்துவிடுவோம் என்ற அச்சம் அதிபருக்கு இருக்கும். இப்போதே 'போர்க்குற்றங்கள் குறித்த விசாரணையை நாங்களே செய்து கொள்கிறோம். சர்வதேச விசாரணை தேவையில்லை' என்று இலங்கை அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நாவிடம் கோரிக்கை வைத்திருக்கிறார். ஐ.நா.வின் விசாரணை அறிக்கையையே தாமதமாக சமர்ப்பிக்கும்படி அமெரிக்காவிடம் கோரிக்கையும் வைத்திருக்கிறார்.

உண்மையிலேயே என்றாவது ஒருநாள் இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடப்பதற்கான சாத்தியங்களோ அறிகுறிகளோ உண்டா? அப்படியே நடந்தாலும் ராஜபக்ச உள்ளிட்ட இனப்படுகொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா? இப்போதுவரை விடை தெரியாத கேள்விகள்தான் இவை.

-யூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன ஒரு இலட்சம் பேரையும் இலங். அரசாங்கம் திரும்பத்தர வேண்டும்

## தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் கோரிக்கை

(கொழும்பு)

**தங்களுடைய பாதுகாப்பை ஐக்கிய நாடுகள் சபை உறுதி செய்தால் தாங்கள் தாயகம் திரும்ப தயாராக இருப்பதாகவும் போர்க் காலத்தில் காணாமற்போன ஒரு இலட்சம் பேரை இலங்கை அரசு திரும்ப கொண்டுவர வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர் என்று கடலோர பாதுகாப்பு குழும தலைவர் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அறந்தாங்கியை அடுத்த அழியாநிலை இலங்கை அகதிகள் முகாமில் அகதிகளின் குறைதீர்க்கும் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கடலோர பாதுகாப்பு குழும தலைவர் சொக்கலிங்கம் தலைமைதாங்கி, அகதிகளின் குறைகளை கேட்டறிந்து, சிறப்புரையாற்றினார். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு கடல்வழியாக 5ஆயிரத்து 640 கடல் மைல் தூரம் கொண்டது. இந்த தூரத்தை கப்பல் மூலம் சென்றாலே 10 நாட்கள் எடுக்கும். ஆனால், தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளிடம் சில சமூக விரோதிகள், படகுகளில் அழைத்துச் செல்வதாக ஆசை வார்த்தை கூறி பணம் பெறுகின்றனர்.

ஆனால், அவ்வாறு படகுகளில் அவுஸ்திரேலியா செல்வதற்கு சாத்தியம் இல்லாததால், அவர்கள் பணத்துடன் தப்பிச் செல்கின்றனர். ஆனால் அகதிகள் நடுக்கடலில் தத்தளிக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே அகதிகள் யாரும் சமூக விரோதிகளின் வார்த்தைகளை நம்பி அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு செல்லும் முடிவை எடுக்க வேண்டாம். மேலும் முகாமிற்கு புதிதாக வருபவர்கள் குறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

உரிய பதிவு இல்லாமல் அகதிகள் முகாமில் வசிப்பது சட்டப்படி குற்றமாகும். எனவே, பதிவு இல்லாதவர்கள் உடனடியாக உரிய ஆவணங்களை வழங்கி பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் யாராவது முகாமில் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவது குறித்து தகவல் தெரிந்தால் பொலிஸாருக்கு தெரிவிக்க வேண்டும். இலங்கை அகதிகளுக்கு தமிழக அரசும், மத்திய அரசும் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. எனவே அகதிகள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திருவரங்குளம் தோப்புக்கொல்லை முகாமில் அகதிகளிடம் கருத்து கேட்ட போது,

இலங்கைக்கு நாங்கள் திரும்பிச் செல்ல வேண்டுமானால் வட மாகாணத்தில் உள்ள இராணுவத்தை இலங்கை அரசு திரும்ப பெற வேண்டும்.

எங்களின் பாதுகாப்பை ஐ.நா உறுதி செய்ய வேண்டும். போர் காலத்தில் காணாமற்போன ஒரு இலட்சம் மக்களை இலங்கை அரசு திரும்ப கொண்டுவர வேண்டும்.

விடுதலைப்புலிகள் என்ற பெயரில் பிடித்துச் செல்லப்பட்ட இளைஞர்களை மீண்டும் விடுதலை செய்ய வேண்டும்.இவற்றை இலங்கை அரசு செய்ய முன்வந்தால் நாங்கள் தாயகம் திரும்ப தயாராக இருக்கிறோம் என்று கோரிக்கை வைத்தனர் என்றார்.

அகதிகளின் இந்த கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிப்பதாக சொக்கலிங்கம் மேலும் உறுதியளித்துச் சென்றுள்ளார். (இ-5)

# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரை பதவி விலகக்கோரியமை தவறு- ரஜீவ விஜேசிங்க

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் இன்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரை பதவி விலகக் கோருவது ஏற்றுக் கொள்ள முடியாது என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் அழுத்தம் காரணமாக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ஷெனிகா ஹிரிம்புரேகம பதவி விலகியுள்ளார்.

தமது பதவி விலகல் கடிதத்தை அவர், உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிமின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பதவிவிலகுமாறு தமக்கு உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம கடிதம் அனுப்பிய நிலையிலேயே தாம் பதவி விலகியதாக ஷெனிகா தெரிவித்திருந்தார்.


எனினும் இதனை இராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க கண்டித்துள்ளார்.

இது முழுமையாக பிழையான விடயம் என்று தாம் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளதாக விஜேசிங்க தெரிவித்தார்.

எனினும் தாம் பதவி விலகி விட்டதாக வெளியான தகவலை அவர் உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சகல விமான நிலையங்களிலிருந்தும் விமானப் படையினர் அகற்றப்படுவர்

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலும் ஏனைய உள்ளூர் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள விமானப்படையினர் அகற்றப்படவுள்ளதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்

இதன்படி 14 விமான நிலையங்களில் இருந்து விமானப்படையினர் அகற்றப்படவுள்ளனர்.

இதேவேளை, சில விமான நிலையங்களின் விஸ்தரிப்புக்களை மேற்கொள்ள அந்த பகுதிகளில் விமானப்படையினர் நிலை கொண்டிருப்பது தடையாக உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் விமானப்படையினரை விமான நிலையங்களில் இருந்து அகற்றுவதால் விமான நிலையங்களின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தற்போதுள்ள பலாலி, வவுனியா, சீனக்குடா, அநுராதபுரம், ஹிங்குராங்கொட, மட்டக்களப்பு, அம்பாறை, கட்டுநாயக்க, இரத்மலானை, கொக்கல, வெலிவேரிய மற்றும் சீரிய போன்ற இடங்களில் உள் விமான நிலையங்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உயிர் நம் கையில்

கொஞ்ச நாளைக்கு முன் ஒரு சினிமாப்படம் பார்த்தோம். அதில் ஒரு காட்சி! அதாவது, ஒருவர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவருடைய மகன் வெளிநாட்டிலிருந்து வருகிறான். வந்து அப்பாவைப் பார்க்கிறான். அப்பாவும் மகனைக் காண்கிறார். அவர் மெதுவாக வாயைத் திறந்து, "உன்னை ஒரு தரம் பார்த்துவிட்டு கண்ணை மூடலாம் என்றுதான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்தேன்" என்கிறார். அதேமாதிரி மகனைக் கண்டதும் கொஞ்ச நேரத்தில் கண்ணை மூடி விடுகிறார்.

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, திரும்பி வரும்போது ஒரு நண்பர் "சினிமாவில்தான் இப்படியெல்லாம் நடக்கும்! நடைமுறையில் அது சாத்தியமில்லை. வேளை வந்தால் போய்ச்சேர வேண்டியது தான்" என்றார்.

இவர் சொல்வதும் சரியென்றுதான் நமக்குத் தோன்றும்!

ஆனால், கலிபோர்னியாவில் நடந்த ஒரு ஆராய்ச்சியின் முடிவு வேறுமாதிரி இருக்கிறது.

"மரணத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டுமா? அது மனிதனால் முடியும்!" என்கிறது இந்த ஆராய்ச்சி. சரி! எவ்வளவு காலம் தள்ளிப்போட முடியும்? என்று கேட்டால் ஒரு குறிப்பிட்டகாலம் வரைக்கும் அது முடியும் என்கிறார்கள்.

அடுத்து வரப்போகும் ஒரு முக்கியமான நாள்வரைக்கும் நாம் இருக்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியுமாம். உதாரணத்துக்கு ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரது மகனுக்கு இன்னும் 10 நாட்களில் கல்யாணம் நடக்கப் போகிறது! அல்லது அவர்களின் குடும்பத்தில் ஏதோ ஒரு விஷேடம் நடக்கப் போகிறது!

சாகக் கிடக்கிறவர் அந்த சந்தோஷத்துக்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார் என்றால் அவருக்கு உயிர் போகாதாம்!

சீனாவில் அறுவடை திருநாளை சனங்களெல்லாம் மிகவும் சந்தோஷமாக கொண்டாடுவார்களாம்! அந்த அறுவடைத் திருநாளுக்கு ஒருவாரம் முதல், சாராசரியாக இறப்பவர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் வரைக்கும் குறைகிறதாம்!

ஆனால், அறுவடை திருநாளை தொடர்ந்து வரும் அடுத்த வாரத்தில் இறப்பு 35 சதவீதம் வரைக்கும் அதிகமாகிறதாம்!

ஒரு சந்தோசமான திருவிழாவுக்கு முன்வாரத்தில் இறப்பு விகிதம் குறைவதற்கும் அதற்குப் பின்னர் இறப்பு விகிதம் அதிகமாவதற்கும் என்ன காரணம் என்று சொல்லி ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள்.

ஒரு மகிழ்ச்சியான விடயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது மரணத்துடன் போராடுபவர்களின் மன வலிமை அதிகரிக்கின்றதாம்.

"அந்த மகிழ்ச்சியான அனுபவத்தை நாம் இழந்து விடக்கூடாது" என்ற எண்ணம் மேலோங்கி மன ஆதிக்கம் உடம்பின் மீது ஆக்கிரமிக்கும் போது மனதில் இருக்கும் விருப்பமும் ஆசையும் நிறைவேறும் வரைக்கும் மரணம் கிட்டவும் நெருங்குவதில்லையாம். ஆனால் ஒரு விடயம் இதற்கு அதிகமான மனோதிடம் மிகவும் அவசியம்! இது ஒரு பத்திரிகையில் நான் பார்த்த குறிப்பு. இதை எத்தனை பேர் ஒத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இருந்தாலும் இப்பொழுதும் கடைசிநேரத்தில் வைராக்கியமாக இருந்து நினைத்ததை சாதித்துவிட்டு மேலே போகிறவர்கள் உண்டு. அதைப்பலர் அனுபவத்தில் கூட பார்த்திருக்கலாம்.

ஒரு பெரியவர் மரணப்படுக்கையில் இருந்தார். அவரின் மகன் வெளிநாட்டிலிருந்து வந்துகொண்டிருந்தான். டாக்டர் அவருக்கு தீவிர சிகிச்சை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் டாக்டரைப் பார்த்து,

"என் பையன் இங்கு வந்து சேரும் வரைக்கும் நான் இருப்பேனா டாக்டர்!" என்று கேட்டார். "நான் இருக்கிறேன்! கவலைப்படாதீர்கள்!" என்றார் டாக்டர். அதற்குப் பெரியவர், "நீங்கள் இருப்பீர்கள் டாக்டர் ! நான் இருப்பேனா? என்று கேட்டேன்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2015 - 14.03.2015



**ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம்! பேச்சுத் திறமையால் பெரிய மனிதர்களின் நட்பை எளிதில் சம்பாதித்துக் கொள்ளும் சிம்ம இராசிநேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் சூரியன் உங்கள் ராசியையே பார்ப்பதால் சென்ற மாதத்தைக் காட்டிலும் ஓரளவு சிறப்பான பலன்களே நடைபெறும் என்று கருதலாம். மனக்குழப்பம் அகலும். மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். சினத்தோடு விலகிச் சென்றவர்கள் திடீரென வந்திணைவர்.

சப்தம ஸ்தானத்தில் 3, 10 இற்கு அதிபதியான சுக்ரன் சஞ்சரிப்பதால் சகோதர வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கண்ணியம் மிக்க நண்பர்களின் ஒத்துழைப்போடு எண்ணிய காரியங்கள் எளிதில் முடிவடையும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது மேலோங்கி இருக்கிறது. எனவே, அடிக்கடி சலனங்களும் சச்சரவுகளும் உருவாகத்தான் செய்யும். அவற்றைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு என்பதால் பக்குவமாகப் பேசிச் சமாளிப்பீர்கள். உரிமையுடன் உங்களுடன் கைகோர்த்துச் சென்றவர்கள் திடீரென உள்ளத்தில் எதையோ நினைத்துக் கொண்டு விலகிச் செல்லலாம். இரண்டில் ராகுவும், எட்டில் கேதுவும் இருப்பதால் உயர்ந்த நிலையில் ஒரு காலமும், உள்ளம் வாடும் நிலையில் மற்றொரு நேரமும் வந்துகொண்டே இருக்கும்.

கடந்த காலத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படாதவர்கள் என்றாலும் கடமையில் சிலரின் குறுக்கீடுகள் வருகின்ற பொழுது இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று எண்ணுவீர்கள். எனவே இது போன்ற காலங்களில் கவனத்தோடு செயற்படுவது மட்டுமல்ல, கடவுள் வழிபாட்டிலும் ஆர்வம் காட்ட வேண்டும். குறிப்பாக சனிக்கிழமை சனி பகவானை வழிபடுவது சாலச் சிறந்தது. அஷ்டமத்துச் செவ்வாயால் அலைச்சலும், அல்லல்களும், ஆரோக்கியத் தொல்லைகளும் ஏற்படாதிருக்க யோக பலம் பெற்ற நாளில் அங்காரக வழிபாட்டை செய்வது நல்லது.

சனியின் ஆதிக்கத்திலிருந்து விடுபடும் வரை எந்தக் காரியத்தைச் செய்தாலும் பிறரிடம் கலந்து ஆலோசித்துச் செய்வது சிறப்பு தரும்.

**மீனச் சுக்ரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 17 ஆம் திகதி மீன ராசிக்கு சுக்ரன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உச்சம் பெறும் சுக்ரனால் மிச்சம் வைக்கும் அளவிற்கு உங்களுக்கு லாபம் கிடைக்கப் போகிறது. இறங்கு முகத்திலிருந்தவர்கள் இனி ஏறுமுகத்திற்கு செல்வர். கரங்குளிரப் பொருள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து முக்கியக் காரியங்களை முடித்துக் கொடுப்பர். சிக்கல்கள் ஒவ்வொன்றாக விலகும். செய்யும் தொழிலில் உங்களை ஏமாற்றியவர்கள் இப்பொழுது, தானே முன்வந்து தவறுகளை ஒப்புக் கொள்வர்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 4 ஆம் திகதி உங்கள் ராசிக்கு 2, 11 இற்கு அதிபதியான புதன் கும்ப ராசிக்குச் செல்கி றார்.




அங்கிருந்து கொண்டு உங்கள் ராசியையே பார்க்கப் போகிறார். தனலாபாதிபதியின் பார்வை உங்கள் ராசியில் பதிவது யோகம்தான். வருமானம் இருமடங்காகும். வங்கிச் சேமிப்புகள் உயரும். திருமண முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். திடீர் பண வரவு திக்குமுக்காட வைக்கும். கொடுத்த கடன்கள் வசூலாகி குதூகலம் காண்பீர்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கிச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். விருப்பங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்ய புத பகவானின் ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்கும் நேரமிது.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

தொழில் ஸ்தானாதிபதி 9 இல் சஞ்சரிக்கும் நேரமிது. சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் மார்ச் 13 ஆம் திகதி மேஷத்தில் சஞ்சரிக்கப் போகிறார்.

இதன் விளைவாக உடன்பிறப்புகள் உதவிக் கரம் நீட்டுவார்கள். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் தளர்ந்த வாழ்க்கையை தக்க விதத்தில் தூக்கி நிறுத்துவீர்கள். செல்வாக்கு மேலோங்கும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

நல்லவர்களும். நம்பிக்கைக்குரியவர்களும் உங்களது வளர்ச்சிக்கு நாளும் வித்திடுவர். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும். சிவராத்திரியன்று சிவன வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். கூட இருப்பவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். குழந்தைகள் வழியில் அதிக விரயம் ஏற்படலாம்.

கடந்த வாரத்தில் மனதை உறுத்திய சம்பவம் ஒன்று இப்பொழுது மகிழ்ச்சிக்குரியதாக மாறலாம். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

விற்ற சொத்திற்குப் பதிலாகப் பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. சிவாலய வழிபாடு சிறப்பினை வழங்கும்.

# ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**தேக்கநிலை மாறி ஆக்க நிலை உருவாகும்! தோற்றத்தில் எளிமையும் சொல்லில் இனிமையும் கொண்ட கன்னி இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதை குரு பார்க்கிறார். எனவே, நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே இந்த மாதத்தில் நடைபெறப் போகின்றது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். பிள்ளைகளால் பெருமைக்குரிய செய்தி வந்து சேரும். பிரச்சினை படிப்படியாக தீர்ந்து நிம்மதி காண்பீர்கள். கூட்டு முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

விரயாதிபதி சூரியன் 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து தனது ராசியைப் பார்ப்பதால் விபரீத ராஜ யோக அடிப்படையில் ஒரு சில நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தனாதிபதி சுக்ரன் 6 இல் இருப்பதால் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். ஊர் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்போடு திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு பதவியுயர்வு கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உடன் பிறப்புகளால் ஒரு சில பிரச்சினைகள் உருவாகி மறையும். சொத்துக்களைப் பாகப் பிரிவினைகள் செய்து கொள்வதில் இருந்த பஞ்சாயத்துக்கள் நீடிக்கலாம். பழைய சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கலாம் என்று நினைப்பீர்கள். ஜென்மத்தில் ராகுவும், கேதுவும் இருப்பதால் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கத்தால் சில நல்ல சந்தர்ப்பங்களும் உங்களுக்கு வந்து சேரலாம். குறிப்பாக வெளிநாட்டுத் தொடர்பு உண்டு.

நீண்ட நாட்களாக முயற்சி செய்து, முயற்சி செய்து அது பலன் அளிக்கவில்லையே என்று ஏங்கியவர்கள் இம்மாதத்தில் துரிதமாக செயற்பட்டு தூரதேசப் பயணங்கள் உறுதியாவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். அலுவலகத்தின் மூலமாகவே அயல்நாடுகளுக்கு அனுப்பும் சூழ்நிலை உருவாகும். தெளிவான மனநிலையோடும், தேசப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடும் பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறப் போகின்றது.

ராகு-கேது பரிகாரம் செய்வதன் மூலம், மேலும் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம். குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவிக் கரம் நீட்டுவர்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் உச்சம் பெறும் நேரம் உங்களுக்கு ஒரு உன்னதமான நேரமாகும். அந்த நிகழ்வு பெப்ரவரி 17 ஆம் திகதி நிகழவிருக்கிறது. 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி உச்சம் பெறும் பொழுது பண வரவு திருப்தி தரும். பாக்கிகள் வசூலாகலாம். தேங்கிய காரியங்கள் ஒவ்வொன்றும் துரிதமாக நடைபெறும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி ஆபரண சேர்க்கை உண்டு.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 4ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத விதமாக நன்மைகள் கிடைக்கும். இல்லம் தேடி சுபச் செய்திகள் வந்து சேரும். மாமன, மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். மக்கள செல்வங்களால் மகிழ்ச்சி கூடும்.




தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்குவீர்கள். எதிரிகள் விலகுவர். உதிரிவருமானங்கள் பெருகும்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 13 ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக சுபவிரயங்கள் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர கால நலன்கருதி நூதனப் பொருட்களை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள். சீர்வரிசைச் சாமான்கள் முதல் ஆபரணங்கள் வரை வாங்கச் சேர்க்கக் கூடிய வாய்ப்பு உண்டு. உறவினர்கள் ஒத்துழைப்போடு செயற்படுவீர்கள். அஞ்சல் வழியில் அனுகூலத் தகவல் வந்து சேரும். இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்கள் போக்கும். சிவராத்திரியன்று சிவாலய வழிபாட்டை மேற்கொள்வது சிறப்பானது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் இனிய மாதமாகவே அமையும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லம் தேடி சுபச் செய்திகள் வந்து சேரும். வாரிசுகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். அடமானம் வைத்த பொருட்களை திருப்பிக் கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் கூடும். உங்கள் பெயரிலேயே பங்குதாரர்களைச் சேர்த்து புதிய தொழில் தொடங்கும் எண்ணத்தை குடும்பப் பெரியவர்கள் ஏற்றுக் கொள்வர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் மற்றும் பதவிகளில் உயர்வும் கிடைக்கலாம். வீடு மாற்றங்களால் நன்மை கிட்டும். சிவராத்திரியன்று சிவனையும், உமையவளையும் வழிபடுவதன் மூலம் சிறந்த பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

# தேக்கநிலை மாறி ஆக்கநிலை உருவாகும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ தாக்குதலில் 15 தீவிரவாதிகள் பலி!



**பாகிஸ்தானில் இராணுவம் நடத்திய தாக்குதலில் நேற்று முன்தினம் 15 தீவிரவாதிகள்உயிரிழந்துள்ளனர்**

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி பெஷாவர் இராணுவ பாடசாலைக்குள் புகுந்த தீவிரவாதிகள் அங்கு இருந்த அப்பாவி மாணவ. மாணவிகள் பலரை சுட்டுக்கொலை செய்தனர்.

இதனையடுத்து தீவிரவாதிகள் மீதான தாக்குதலை அந்நாட்டு இராணுவம் தீவிரப்படுத்தி உள்ளது. இந்தநிலையில் குர்ரம் பழங்குடியின் மாகாணத்தில் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள சோதனைச்சாவடி மீது திடீரென தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

பாகிஸ்தான் இராணுவம் இதற்கு தக்க பதிலடி கொடுத்து அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இந்த தாக்குதலில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மற்ற தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தான் பகுதிக்குள் தப்பி ஓடி விட்டனர். இதில் ஒரு இராணுவ வீரர் காயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தீவிரவாதிகளின் மோதலில் ஏமனில் 26 பேர் உயிரிழப்பு

(சானா)

ஏமன் நாட்டில் தலைநகர் சானாவை ஹவ்தி தீவிரவாதிகள் அண்மையில் கைப்பற்றினர். ஜனாதிபதி மாளிகையையும் தங்கள் கட்டுப்பாட்டில் அவர்கள் கொண்டு வந்தனர். இதனையடுத்து ஜனாதிபதி இராஜினாமா செய்தார். இதனால் அங்கு அரசியல் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

வன்முறை சம்பவங்களும் தொடர்ந்து நடந்து வருவதால் ஏமனில் உள்ள தங்கள் நாட்டு தூதரகங்களை வரிசையாக பல்வேறு நாடுகளும் மூடி வருகின்றன. கடந்த வாரம் அமெரிக்கா, இங்கிலாந்து. ஜேர்மனி. இத்தாலி மற்றும் சவுதி அரேபிய நாடுகள் தங்கள் தூதரக ஊழியர்களை திரும்ப அழைத்து தூதரகங்களை அதிரடியாக மூடினர். அந்த வரிசையில் தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தங்களது தூதரகத்தை மூடுவதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினம் ஏமனின் அல் பேடா மாகாணத்தில் ஹவ்தி தீவிரவாதிகளுக்கும், சன்னி பிரிவினருக்கும் இடையே கடுமையான சண்டை நடந்தது. இதில் 16 ஹவ்தி படையினரும், 10 சன்னி பிரிவினரும் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## அமெரிக்க விமானப்படைத்தளமருகே முக்கிய நகர் ஐ.எஸ்.ஐ.எஸ்.வசமானது



ஈராக்கிலும். சிரியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக அமெரிக்காவும். அதன் நேச நாடுகளும் கடந்த ஒகஸ்டு மாதம் 8ஆம் திகதி முதல் வான் வழி தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது குறிப்பிட்ட அளவுக்கு தரை வழி தாக்குதல் நடத்தவும் அதிகாரம் வழங்குமாறு கேட்டு அமெரிக்க பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி ஒபாமா தீர்மானம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நிலையில். ஈராக் நாட்டில் உள்ள அல் பாக்தாதி நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்துள்ளதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த நகரம். அன்பார் மாகாணத்தில் உள்ளது. அமெரிக்காவின் விமானப்படை தளம் அமைந்துள்ள அல் ஆசாத் நகருக்கு அருகே உள்ளது. இங்கு ஈராக் அரசு படைகளுக்கு அமெரிக்க கடற்படையினர் 300 பேர் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஈராக் படையினருடன் கடுமையாக சண்டையிட்டு. அல் பாக் தாதி நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள் கைப்பற்றினர். இதை அமெரிக்கா உறுதி செய்துள்ளது. இது குறித்து அமெரிக்காவின் இராணுவ தலைமையகம்பெண்டகன் செய்தி தொடர்பாளர் ரியர் அட்மிரல் ஜோன் கிர்பை கூறியதாவது.

அல் பாக்தாதி நகரில் கடந்த சில நாட்களாகவே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இப்போது அந்த நகரை அவர்கள் முழுமையாக கைப்பற்றி விட்டனர். சண்டை நடந்த இடத்தில் அமெரிக்க படையினர் இல்லை. இப்போது ஈராக் அரசிடம் இருந்து வந்த அல் பாக்தாதி நகர் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் வீழ்ந்து விட்ட காரணத்தால், ஒட்டுமொத்த தீவிரவாத எதிர்ப்பு யுத்தத்தில் எந்த பின்னடைவும் கிடையாது.

கடந்த 2 மாதங்களில் இது முதல் சம்பவம்தான். நாம் இன்னும் வீழ்த்தப்பட வேண்டிய பகைவர்கள்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள். ஒரு நகரம் மட்டும் தான் வீழ்ந்திருக்கிறது. அன்பார் மாகாணம் முழுமையாக அல்ல. ஈராக்கும் முழுமையாக வீழ்ந்து விடவில்லை எனத் தெரிவித்தார். (இ-5)

## போகோஹராம் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்காவிடம் உதவி கேட்கும் நைஜீரியா

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஜனாதிபதியாக குட்லக் ஜோனாதன் பதவி வகித்து வருகிறார். இவரது அரசுக்கு எதிராக போகோ ஹராம் தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். வெடி குண்டு வீச்சு. துப்பாக்கி சூடு போன்ற வன்முறை சம்பவங்கள் மூலம் தினமும் ஆயிரக் கணக்கான பொதுமக்களை கொன்று குவிக்கின்றனர்.

பாடசாலை மாணவிகள் மற்றும் இளைஞர்களை கடத்தி விற்பனை செய்கின்றனர். இவர்களின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நைஜீரியாவில் விரைவில் ஜனாதிபதி தேர்தல் நடக்க இருக்கிறது. இதை சீர்குலைக்கவும் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் வடமேற்கு நைஜீரியாவில் உள்ள காம்பே நகருக்குள் நுழைந்த நூற்றுக் கணக்கான தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். பின்னர் தேர்தலை பொதுமக்கள் புறக்கணிக்கும்படி துண்டு பிரசுரங்களை வீசி சென்றனர். இவர்களது அட்டூழியம் தாங்காமல் அங்கு 24 மணி நேரம் கடையடைப்பு நடத்தப்பட்டது.

இந்த நிலையில் நைஜீரியா ஜனாதிபதி குட்லக் ஜோனாதன் போகோஹராம் தீவிரவாதிகளை ஒடுக்கி அழிக்க அமெரிக்க உதவியை அவர் நாடியுள்ளார் இது குறித்து ஒரு அமெரிக்க பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அதில் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா போரிடுகிறது. அதே நேரத்தில் அமெரிக்க படைகள் ஏன் நைஜீரியா வரக்கூடாது? போகோஹராம தீவிரவாதிகளுக்கு எதிராக சண்டையிடக் கூடாது?

நாங்கள் அவர்களது நண்பர்கள். தற்போது நாங்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறோம். எனவே அவர்கள் வருகையை நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றார்.

அதற்கு பெண்டகன் செய்தி தொடர்பாளர் அட்மிரல் ஜோன்கிர்பி பதில் அளித்துள்ளார். அதில் நைஜீரியாவுக்கு அமெரிக்க படைகளை அனுப்பும் திட்டம் இல்லை. தற்போது அங்கு அமெரிக்க படைகள் எதுவும் முகாமிட்டிருக்கவில்லை.

அதே நேரத்தில் போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கு எதிராக போராட ஆபிரிக்க நாடுகளுக்கான படையில் அமெரிக்க

## சிலியில் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி முன்னாள் தூதுவர் உட்பட மூவர் பலி!

சிலி நாட்டின் ஆண்டஸ் மலைத் தொடரின் அடிவாரம் அருகே ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் அந்நாட்டு முன்னாள் தூதர் உட்பட மூவர் பலியாகியுள்ளனர்.

சாண்டியாகோவில் இருந்து 570 கி.மீ. தொலைவில் உள்ள ஆண்டீஸ் மலைத்தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. மலைத்தொடரின் அடிவாரத்தில் விழுந்தவுடன் ஹெலிகொப்டர் தீப்பிடித்தது. இதில் முன்னாள் தூதரும் தொழிலதிபருமான இடாலோ சுனினோ உட்பட மூவர் பலியானார்கள். ஒருவர் மட்டும் ஹெலிகொப்டரிலிருந்து குதித்து உயிர் தப்பினார்.

உயிரிழந்தவர்களின் சடலம் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டது. காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த அந்நாட்டு விமான போக்குவரத்து துறை உத்தரவிட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வெட்டி பிடிக்கும் இராணுவம் ஏ.கே.47 துப்பாக்கியை ஏந்தட்டும்

## மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

(குருமன்காடு)

மண்வெட்டி பிடிக்கும் இராணுவம் ஏ.கே.47 பிடிக்க வேண்டும். இராணுவம் இராணுவமாக இருக்க வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் எஸ்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.



தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், வடபகுதியில் மீனவர்கள் மற்றும் தமிழ் மக்களுடைய காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. அவர்கள் எமது மக்களின் விவசாய நிலத்தில் மண்வெட்டி பிடித்து தோட்டம் செய்கிறார்கள். அவர்களின் மரக்கறிகள் சந்தை விலையை தீர்மானிக்கின்றன.

உயர்பாதுகாப்பு வலயம் என தெரிவித்த பகுதியில் இராணுவம் விருந்தினர் விடுதி அமைத்து அங்கு ஒரு இராணுவ வீரர் பேனை பிடித்து பில் எழுதிக்கொண்டிருக்கிறார். கடற்கரையில் ஹன்ரின் அமைத்து இராணுவம் யோக்கற் விற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். இராணுவம இராணுவமாக இருக்க வேண் டும்.

மண்வெட்டி பிடிக்கும் இராணுவம் ஏ.கே.47 துப்பாக்கியை ஏந்தட்டும். பேனை பிடித்து பில் எழுதும் படை வீரர் பிஸ்ரல் பிடிக்கட்டும். யோக்கற் எடுத்து கொடுப்பவர் கிரனைட் வைத்திருக்கட்டும். இவ்வாறு நிலைமை மாறவேண்டும். எமது மக்களை கடலிலும் தரையிலும் அடக்குகிறார்கள். இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்றனர். அவர்களை பிடிப்பதும் விடுவதுமாக என அரசியல் நடத்துகிறார்கள். எமது நாட்டு எல்லைக்குள் வருவது குற்றம். அதனை தடுப்பதை விடுத்து பேச்சுவார்த்தை எதற்கு.

அதன் மூலம் விட்டுக் கொடுப்பு. அரசாங்கத்தினதும் அரசியல் வாதிகளினதும் அரசியலால் பாதி க்கப்படுவது நாங்களே. இதனை தொடர்ந்து அனுமதிக்க முடியாது. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இம் மாநாட்டில் கலந்து கொண்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவிக்கையில், இலங்கை ஜனாதிபதி இந்தியா செல்வதும் இந்திய பிரதமர் இலங்கை வருவதும் இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினையை தீர்க்க நல்ல சந்தர்ப்பம். அதனை இந்த அரசாங்கம் பயன்படுத்த வேண்டும். கடந்த 25 வருடங்களாக வடக்கு, கிழக்கின் வலிகாமம் வடக்கு, முள்ளிக்குளம், பள்ளிமுனை, சம்பூர், பானமை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர். அவர்களை உடனடியாக மீள்குடியேற்ற வேண்டும்.

அரசியல் ரீதியாக மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தெற்கு மீனவர்கள் வடக்கு கடலுக்குள் ஆக்கிரமிப்பு நோக்கில் வருவதையும வடபுலத்து மீனவர்கள் பாதிக்கப்படுவதையும் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று டைனமைட் உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி முறைகள் பின்பற்றப்பட்டு வருகிறது. அதனை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தலைமைத்துவ பெண்களின்மற்றும் அவர்களின் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இந்த அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் கவனம் செலுத்த வேணடும். இந்த அரசாங்கத்தை மக்கள் மாற்றத்திற்காகவே வரவைத்தனர். அதனை இவர்கள் செய்ய வேண்டும். கடந்த அரசாங்கம் போல் செயற்பட்டால இவர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேணடிவரும் எனவும் தெரிவித்தார். (அ-2-250)










கிளி/திருவையாறு மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற போது.... (படங்கள் :- திருவையாறு செய்தியாளர்)

## ஆசிரியர் பற்றாக்குறை பெற்றோர் முறையீடு

(குருமன்காடு)

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆசிரியர் நியமிக்கப்படாமை தொடர்பில் பெற்றோர் கல்வி அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவரும் நிலையிலேயே பெற்றோர் இம்முறைப்பாட்டை செய்துள்ளனர்.

இம்முறை முதலாம் ஆண்டுக்கு 39 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஒரு ஆசிரியர் கூட கற்பிப்பதற்கு நியமிக்கப்படாமையானது பெரும் வேதனைக்குரியது என பெற்றோர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தாம் அதிபர் மற்றும் வலயக்கல்வி பணிப்பாளருக்கு முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமை கவலையளிப்பதாகவும் கூறினார்.

எனவே இது தொடர்பில் வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளர் மற்றும் வட மாகாணக் கல்வி அமைச்சர் ஆகியோர் கவனமெடுத்து, தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு உதவவேண்டும் என பாதிக்கப்பட்ட பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-250)

## தலைமைத்துவப் பயிற்சி

(பணிக்கன்குளம்)



துணுக்காய் பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவப்பயிற்சிநேற்று காலை 9மணி முதல் பிற்பகல் 2 மணிவரைமல்லாவிபொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் நிறுவனத்தினுடைய இளைஞர் வலுவூட்டல் உத்தியோகத்தர் மு.நகுலேஸ்வரன் ,துணுக்காய் பிரதேச செயலாக இளைஞர் சேவை அதிகாரி ஜெ.சுகந்தன், மல்லாவி கிராம சேவையாளர் நா. துளசிதாஸ் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 25 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றிருந்தனர். (அ-2-28)

## மக்கள் அனைவருக்கும் 80 நாட்களில் மின்சாரம்

(குருமன்காடு)

அனைத்து மக்களுக்கும் மின்சாரத்தை 80 நாட்களுக்குள் வழங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என மின்சக்தி எரிசக்தி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.



வவுனியா நெல்லிஸ்டார் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்ற வட மாகாண மின்சாரசபை அதிகாரிகள் மற்றும் வட மாகாண அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் தெரிவிக்கையில், வட மாகாண அரசாங்க அதிபர்கள் மக்களின் தேவைகளை விரைவாக செய்து கொடுக்க முன் வர வேண்டும். குறிப்பாக அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு நான் புதிதாக இதுபற்றி கூறத்தேவையில்லை.

நாட்டில் நல்லாட்சியானது பிரதான இருகட்சிகளும் ஏனைய கட்சிகள் சிலவும் சேர்ந்து உருவாக்கியுள்ளன. இதன் மூலம் மக்கள் சிறந்ததொரு சுதந்திரத்தை எதிர்பார்க்கின்றனர். அது சாதாரண சுதந்திரத்தை விட பரிபூரணமான, மனதளவில் சுதந்திரத்தை அனுபவிப்பதாக அமைய வேண்டும். எமது சக்தியை பயன்படுத்தி 80 நாட்களுக்குள் யாவருக்கும் மின் சாரத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். அதற்கு மின்சாரசபை உத்தயோகததர்கள் ஒத்துழைக்க வேணடும். குறிப்பாக வடக்கில் மாத்திரம் 28 நிலையங்கள் 80 நாட்களில் பூரணப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என அதிகாரிகள் கோரியுள்ளனர். எனவே, நாமும் இரவு பகல் பாராது எதிர்வரும் மார்ச் மாதம் 14,15ஆம் திகதிகளில் மக்கள் பயன்பெற செய்வோம்.

மின்சாரசபைக்கு ஒப்பந்தக்காரர்களின் ஒத்துழைப்பு முக்கியமானதாகும். எனவே நாம் பொலிஸாரிடம் ஒத்துழைப்புகளை கேட்டு அவர்களிடம் உள்ள வசதிகளை பயன்படுத்தி மிக விரைவாக மின்சாரத்தை வழங்கும் செயற்பாடுகளையும் முன்னெடுப்போம். எமக்கு குறுகிய காலத்தில் பாரிய இலக்கை அடைய வேண்டியுள்ளது. மீண்டும் நாம் எண்ணெய் விலையை குறைப்போம். அதனூடாக மக்கள் பல பலன்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்போம் என தெரிவித்தார்.

கிளிநொச்சி, வவு னியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் மின்சார விநியோகப் பணிகள் தொடர்பில் ஆராயப்பட்டதோடு எஞ்சிய பணிகளை வரும் 80 நாட்களுக்குள் நிவர்த்தி செய்வது பற்றியும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், அமைச்சின் செயலாளர் ஹேரத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகிரியாவில் பெயரை எழுதிய யுவதி கைது

சிகிரியா சுவரில் தனது பெயரை எழுதிய மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேசத்தைச்சேர்ந்த யுவதியொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிகிரியா ஓவியத்தின் மீது தனது பெயர் மற்றும் 10 அல்லது 12 எழுத்துக்களை அவர் எழுதியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடைத்தொழிற்சாலையை சேரந்த ஊழியரான அந்த யுவதியை நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிகிரியாவுக்கு முதன் முறையாக வந்த அந்த யுவதி, ஓவியங்களை பார்த்தவுடன் அதன் மீது ஏற்பட்ட ஈர்ப்பினால் இவ்வாறு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 50 பேர் அடங்கிய குழுவுடன் சுற்றுலாவில் வருகைதந்த அந்த யுவதி, பாதுகாப்பு படையினர் நால்வர் இருக்கும் போதே இவ்வாறு எழுதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுவதியின் இந்த செயற்பாட்டினால் ஓவியத்துடன் இருந்த பழைய கவிகளில் நான்கு நாசமடைந்து விட்டதாக தொல்பொருளியல் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)

# பொறுப்புக் கூறலுக்கு நல்லதொரு சந்தர்ப்பம்

## அமெரிக்கா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**உயர்ந்தமட்ட பொறுப்புக்கூறல் மனித உரிமை மற்றும் ஜனநாயகத்தை பாதுகாத்தல் ஊழலுக்கு எதிராக போராடுதல் உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கு நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் சிறந்த சந்தர்ப்பத்தை இலங்கைக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது என்று அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொணடுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை அந்நாட்டின் இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி வோஷிங்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த சந்திப்பில் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைசசர் மங்கள சமரவீர அமெரிககாவை இலங்கை அச்சுறுத்தலாக பார்க்கவில்லை என்றும் அமெரிக்காவை ஒரு வாய்ப்பாகவே பார்ப்பதாகவும் 100 நாள் வேலைத்திட்டத்தில் நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான இடத்தை வழங்கியுள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கைக்கும் அமெரிககாவுக்கும் இடையிலான உறவை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இரண்டு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சிறைச்சாலை பாதுகாவலர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பதவி வெற்றிடமாகியுள்ள சிறைச்சாலை பாதுகாவலர் ஆண் மற்றும் பெண் பாதுகாவலர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு 18 வயதிற்கு குறையாத 30 வயதுக்கு மேற்படாதவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப தகைமைகளாக க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மற்றும் கணி[illegible] உட்பட 2 பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்குள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆண் விண்ணப்பதாரிகள் உயரம் 5 அடி 4 அங்குலமும் மார்பு வெளிச்சுவாசத்துடன் 32 அங்குலமாக இருக்கவேண்டும்.

பெண்விண்ணப்பதாரிகளின் உயரம் 5 அடி 2 அங்குலமாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், இல. 150 பேஸ்லைன் வீதி, கொழும்பு-9 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். (அ)

## தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

அரச அச்சுத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஆரம்பப் பகுதி அளவிலான தொழில்நுட்ப சேவை வகை III ஆம் தர நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் உள்ளோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப தகைமைகளாக க.பொ.த (சா/த) பரீட்சையில் இர[illegible]டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில் சார்ந்த தகைமையாக மூன்றாம்நிலை மற்றும் தொழில் சார் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தேசிய தொழில்சார் தகைமையின் (NVQ) இரண்டாம் அல்லது மூன்றாம் மட்டத்திற்குரிய துறையின் கீழ் தேர்ச்சியைப்பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னதாக அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத்திணைக்களம், கொழும்பு-8 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலயத்திலோ அல்லது 13.02.2015 அன்று வெளியான வர்த்தமானிப் பத்திரிகையிலோ பார்வையிடலாம். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 130-170 | 150 | 110 | 200 |
| தக்காளி | 220 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 80 |
| கரட் | 150 | 120 | 90 | 160 |
| பூசணி | 120 | 100 | 80 | 100 |
| புடோல் | 40 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 110 | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 110-150 | 100 | 100 | 140 |
| லீக்ஸ் | 180 | 200 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | — | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 200 |
| முருங்கைக்காய் | — | 600 | — | 800 |
| போஞ்சி | — | 100 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 100-160 | 100 | 130 | 140 |

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி ஞானசம்பந்தன் தையல்நாயகி

யாழ்.அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசம்பந்தன் தையல்நாயகி கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 18 ஆம்திகதி புதன் கிழமை அன்று முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### மகாலிங்கம் பரமு


யாழ்.அராலி வடக்கு செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் பரமு கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் இந்தியா சென்னை பெசன்ட் நகர் என்னும் இடத்தில் நடைபெற்று பின்னர் பிற்பகல் 3 மணியளவில் பெசன்ட் நகர் மின் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சோமசுந்தரம் பார்வதிநாயகி

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பார்வதிநாயகி கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30-4.30 மணிய ளவில் Parish Church Hall, Church Road,Le ather Head, Surrey KT22 8BD United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### றோமான் கிறிஸ்ரியன்

யாழ்.குருநகரைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட றோமான் கிறிஸ்ரியன் கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதித்திருப்பலி நாளை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி கேசவராஜா ரகுரஞ்சினி

கிளிநொச்சி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும்பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கேசவராஜா ரகுரஞ்சினி கடந்த 28 ஆம்திகதிகாலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2.30மணிக்கு Crematorium dupere Lachaise,71 Rue des Rondeaux 75020 Paris, France என்னும் முகவரியில்தகனம் செய்யப்படும்.



### சாமுவேல் செல்வரட்ணம் தம்பையா

(இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்)

இருபாலையை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சாமு வேல் செல்வரட்ணம் தம்பையா நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று முற்பகல் 10 மணியளவில் சீயோன் தேவாலயத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்வாரி சேமக் காலை தாவடியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி இந்திரசேனன் மாதவாம்பிகை

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரசேனன் மாதவாம்பிகை கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சின்னத்துரை தெய்வீகராணி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா மெல்பேர்னை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை தெய்வீகராணி கடந்த 31 ஆம்திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்க ட்கிழமை அவுஸ்திரேலியா மெல்பேர்னில் நடை பெற்று பெற்ற பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்..



### நன்னித்தம்பி விட்டுனுராஜா

யாழ்.சங்கானை கிழக்கை பிறப்பிடமாகவும் லண்டன் Ilford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி விட்டுனுராஜா கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை பிற்பகல் 2.30 மணியளவில் City of London Cemetery & Crematorium, Aldersbrook Road, Greater London, E12 5 DQ UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்.ஜனாதிபதியின் வருகையால் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு



(கொழும்பு)

**இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய வருகை அந்நாட்டு தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து செய்தியாளர்களிடம் தமிழிசை சவுந்தரராஜன் கூறுகையில், "இலங்கை தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டு வரும் நிலையில், இலங்கை ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போக்கு தமிழர்களின் வாழ்வாதாரத்திற்கு நல்லதல்ல.

இலங்கை தமிழர் விவகாரத்தில் நிரந்தர தீர்வு ஏற்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசும், தமிழக பா.ஜ.கவும் உறுதியாக உள்ளது.

இலங்கை தமிழர் பிரச்சினை நிரந்தர தீர்வுக்கு வரும் என்ற மிகப்பெரிய நம்பிக்கையை இலங்கை ஜனாதிபதியின் வருகை ஏற்படுத்தியிருக்கிறது. அவர் வந்து, பிரதமரையும், வெளியுறவுத்துறை அமைச்சரையும், அதிகாரிகளையும் சந்தித்துவிட்டு, பல தீர்வுகளை கொடுக்க இருக்கிறார் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரிகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்கும் வகையில் விரைவில் மாற்றம் ஏற்படும்". இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் கூறினார். இலங்கை ஜனாதிபதி 4 நாள் அரசு முறைப் பயணமாக நேற்று இந்தியா சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கொழும்பு துறைமுகத்திட்டம் குறித்து பிரதமரே கருத்துக் கூற முடியும்

(கொழும்பு)

சீனாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் "கொழும்பு துறைமுக நகரம்" திட்டம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே கருத்துக்கூற முடியும் என தேசிய நிறைவேற்று சபை தீர்மானம் எடுத்துள்ளது.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் அமைச்சர்களாக ராஜித சேனாரட்ன, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் விடுத்த முரண்பட்ட கருத்துக்களை அடுத்தே, தேசிய நிறைவேற்றுசபை பிரதம அமைச்சருக்கு அந்த அதிகாரத்தை வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள குழு தற்போது ஆராய்வுகளை மேற்கொண்டுள்ளது.

இதன் அறிக்கை 45 நாட்களுக்குள் வெளியாகும். இதனையடுத்து கொழும்பு துறைமுக நகரம் திட்டம் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிய வந்தால், அந்த திட்டம் இரத்துச் செய்யப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-5)

# மக்கள் பாதுகாப்பு ஒழுங்குகளை ரத்துச்செய்ய தீர்மானம்

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு ஒழுங்குகளை இரத்துச்செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி குறித்த யோசனை அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு நாடாளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்றப்படவுள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் தேசிய நிறைவேற்று சபைக்கும் குறித்த பொதுமக்கள் பாதுகாப்பு ஒழுங்குகள் அவசியம் இல்லை என்ற விடயம் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1947 ஆண்டில் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டது.

இதன்பின்னர் அதில் 1949, 1953, 1959, 1978 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் இந்த சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இந்த சட்டத்தின் கீழேயே அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்ற சட்டங்கள் இயற்றப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வித்தியின் "என் எழுத்தாயுதம்" நூல் சூரிச்சிலும் ஒஸ்லோவிலும் வெளியீடு

சிரேஷ்ட ஊடகவியலாளர் என். வித்தியாதரனின் "என் எழுத்தாயுதம்" நூலின் அறிமுக விழா எதிர்வரும் 22ஆம் திகதி சுவிஸின் சூரிச் நகரிலும், எதிர்வரும் முதலாம் திகதி நோர்வேயின் ஒஸ்லோ நகரிலும் நடைபெறவிருக்கிறது.

சுவிஸில் 'Gemein schafts zentrum, Loogarten, Salzweg -1, 8048 Zurich.' என்ற இடத்தில் உள்ள மண்டபத்தில் "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சுவிஸ் பழைய மாணவர் சங்கம்" அமைப்பின் தலைவர் த.நீதிராஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இதேவேளை சுவிஸில் உள்ள அனைத்துத் தமிழ் ஊடகவியலாளர்களையும் ஒருங்கே மேடையில் இருத்தி சுவிஸ். தமிழ் ஆர்வலர்கள், ஈழத்தமிழரின் அரசியல் நிலைவரங்கள் குறித்து வினாக்களைத் தொடுக்கும் "கேள்வியால் வேள்வி" என்ற விசேட நிகழ்வும் இந்த நூல் வெளியீட்டின்போது இடம்பெறும்.

ஒஸ்லோவில் அறிமுக விழா மார்ச் முதலாம் திகதி நடைபெறும். இரண்டு நிகழ்வுகளிலும் நூலாசிரியர் ஏற்புரை வழங்குவார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like

284

கவிமாறன்




கணேசன்




எஸ்.சன்




சுஜா சுஜா

மரணம் உன்னை விட
பெரியதுதான் ஆனாலும்...!
அது உன்னை ஒரே ஒருமுறைதான்
ஜெயிக்க முடியும். ஆனால் நீ வாழும்
ஒவ்வொரு நொடியும்
மரணத்தை ஜெயித்துக் கொண்டிருக்கிறாய்
என்பதை மறந்து விடாதே!

சுரன் குமார்




ஆர்.பாலராஜ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

சிறைக்குள் உள்ளே இருப்பவர்கள் வெளியே இருக்கிறார்கள். வெளியே இருக்க வேண்டிய வர் உள்ளே இருக்கிறார்கள். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகமாக தேர்தல் சீர்திருத்தம் அமையக்கூடாது

## ஜனாதிபதியின் நிலைப்பாடு அதுவே என்கிறார்-மனோ

(கொழும்பு)

இன்றைய தேர்தல் முறைக்கு சீர் திருத்தம் எப்போது கொண்டுவரப்பட்டா லும், அது ஒருபோதும் சிறுபான்மை மக் களை பிரதிநிதித்துவம் செய்யும் கட் சிகளுக்கும், சிறு கட்சிகளுக்கும் பாத கமாக அமைந்து விடக்கூடாது.

தேர்தல் மூலம் தங்களை பிரதிநிதி த்துவம் செய்யும் வாய்ப்பு மறுக்கப்படும் போதுதான், சட்டவிரோத வன்முறை சார்ந்த வழிமுறைகளை நாடும் நிலை மைக்கு சிறுபான்மை பிரிவினர் தள் ளப்படுகிறார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தேசிய நிறை வேற்று சபை கூட்டத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேசிய நிறை வேற்று சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்ததாவது,

ஆம், இந்த கருத்தை ஜனாதிபதி மிகத் தெளிவாக தெரிவித்தார். நூறு நாள் வேலைத்திட்டத்திற்குள் இன்றைய தேர்தல் முறை மாற்றப்படும் யோசனை யும் உள்ளது.

இந்த காலவரையறைக்குள் அது நடைமுறை படுத்த முடியுமா என்ற ஒரு சிக்கலும் இருக்கிறது. எனினும் இந்த மாற்றம் எப்போது நிகழ்ந்தாலும், அது சிறு பான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கும், சிறு கட்சிக ளுக்கும் பாதகம் விளைவித்து விடக் கூடாது என்று ஜனாதிபதி சொன்னார்.

ஜனாதிபதி முறைமை மாற்றப்பட்டு, அதிகாரங்கள் பாராளுமன்றத்துக்கு மாற்றப்படும் போது, தேர்தல் முறைமை யும் மாற்றப்பட வேண்டும். இல்லாவிட் டால் அது அரசாங்கத்தின் ஸ்திர தன் மையை சீர்குலைத்துவிடும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதி நிசாந்த வர்ணசிங்க கூறிய கருத்தை அடுத்து ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்க ளின் போது, இடைமறித்த ஜனாதிபதி இவ்விதம் கூறினார்.

இன்றைய தேர்தல் முறை மாற்றப் பட்டு புதிய தேர்தல் முறை கொண்டு வரப்பட்டால், புதிய தேர்தல் தொகுதிகள் வரையறை செய்யப்பட வேண்டும். அதற்கு கால அவகாசம் தேவைப்படுகி றது. எனவே கடந்த கால தேர்தல் தொகு திகளின் அடிப்படையிலேயே உத்தேசி க்கப்பட்டுள்ள தினேஷ் குணவர்த்தன குழுவின் புதிய கலப்பு தேர்தல் முறை யின் கீழ் தேர்தலை நடத்துவோம் என்று நந்தன குணதிலக்க கூறினார்.

பழைய தேர்தல் தொகுதிகளை அப் படியே ஏற்றுக்கொண்டு புதிய கலப்பு தேர்தல் முறையின் கீழ் தேர்தலை நட த்த சிறுபான்மை கட்சிகள் ஒருபோதும் உடன்பட முடியாது.

உண்மையில் நாங்கள் தினேஷ் குணவர்த்தன குழுவின் புதிய கலப்பு தேர்தல் முறை திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. அது இன்னமும் மாற்றப்பட வேண்டும்.

சிறுபான்மை பிரதிநிதித்துவங்க ளுக்கு முழுமையான உத்தரவாதம் இல்லாத எந்த ஒரு முறையும் தேசிய ஐக்கியத்துக்கு பாதகமானது என நான் இடைமறித்து கூறினேன்.

தினேஷ் குணவர்த்தன குழுவின் புதிய கலப்பு தேர்தல் முறை திட்ட த்தை தாமும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய தேர்தல்முறை சிங்கள மக்களை பெருவாரியாக பிரதிநிதித்துவம் செய்யும் பெரிய கட்சிகளுக்கும், வடக்கில் வாழும தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கும் ஒருவேளை சாதகமாக அமையலாம்.

ஆனால், இந்நாட்டில் வாழும் முஸ் லிம் மக்களுக்கும், தென்னிலங்கை யில் வாழும் தமிழ் மக்களுக்கும் புதிய தேர்தல்முறை மிகவும் பாதகமானது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவுப் ஹக்கீம் அப்போது தெரிவித்தார்.

அப்படியானால் நாட்டின் ஸ்திரதன் மையை கருத்தில் கொண்டு, ஜனாதி பதியின் அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்துக்கு மாற்றப்பட முடி யாத நிலைமை ஏற்படலாம் என்று அப்போது இடைமறித்து கூறிய ஜனா திபதி மேலும் எது எப்படியிருந்தாலும், உத்தேச தேர்தல் முறை மாற்றம் ஒரு போதும் சிறுபான்மை மக்களை பிரதி நிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கும், சிறு கட்சிகளுக்கும் பாதகம் விளை வித்து விடக்கூடாது என்று கூறினார் எனவும் மனோ கணேசன் தெரி வித்தார். (செ)

# தண்டனைகள் தாமதமானால் குற்றவாளிகள் வலுவடைவர்

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி அடைந்ததை அடுத்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் ஆட் சியில் இருந்தபோது செய்த பாதகங்கள் வெளி வரத் தொடங்கி உள்ளன.

அதில் மிகவும் முக்கியமானது ஜனாதிபதித் தேர் தலில் தனக்குத் தோல்வி ஏற்பட்டுள்ளதை உறுதி செய்த மகிந்த ராஜபக்ஷ நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற் படுத்த முயற்சி செய்தார் என்ற செய்தியாகும்.

இராணுவ ஆட்சி கொண்டு வரப்பட்டிருந்தால்; மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரம சிங்க உட்படப் பல அரசியல் தலை வர்கள் சிறை சென்றிருப்பர். இன்னும் சிலர் காணா மல் போயிருப்பர் .நல்ல காலம் இராணுவ ஆட்சிக்கு படைத்தரப்பு சம்மதிக்கவில்லை என்று கேள்வி.

எதுவாயினும் நாட்டில் இராணுவ ஆட்சியைக் கொண்டு வர முயற்சி செய்வதென்பது பாரதூரமான குற்றமாகும்.

இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட் டுதல் என்ற பேரில் எத்தனையோ தமிழ் இளைஞர் கள் சிறையில் அடைக்கப்பட்டனர். புதிய புதிய சட்டங் கள் கொண்டு வரப்பட்டன. பிரிவினைவாதத்திற்கு துணைபோக மாட்டோம் என்று சத்தியம் செய்கின்ற நடைமுறை கூட அரசியல் அமைப்பில் புகுத்தப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்க, நாட்டில் இராணுவப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு சதித்திட்டம் தீட்டிய முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன்? என்ற கேள்வி ஏற்படுகின்றது.

அதுமட்டும் அன்றி மகிந்த ராஜபக்ஷவின் சகோ தரர்கள் பொறுப்பான பதவியில் இருந்து கொண்டு ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டதான குற்றச்சாட் டுகள் குறித்தும் இன்னமும் சட்ட நடவடிக்கை எடுக் கப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில், மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படுகிறதா? என்ற சந்தேகம் ஏற் படுகிறது. பொதுவில் குற்றவாளிக்கு உரிய தண்டனை என்பது உடனடியாக வழங்கப்பட வேண்டும். இல் லையேல் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அரசியல் பலத்தின் களநிலைமையை தமக்குச் சாதகமாக்கி விடுவர். அத்தகையதொரு நிலைமை நடக்குமாக இருந்தால் குற்றவாளிகள் பொய்ப்பிரசாரம் செய்து நியாயமான ஆட்சியை முறியடிக்கவும் செய்வர். அதற்கான சந்தர்ப்பமும் சாத்தியமும் இலங்கையில் தெரிகிறது.

குறிப்பாக எதிர்வரும் பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டு பிரதமர் பத வியை பெறுவதற்கான முயற்சிகள் நடந்து கொண் டிருக்கின்றன. அந்த முயற்சி வெற்றி தருமாக இருந் தால், இராணுவப் புரட்சியை ஏற்படுத்த முற்பட்டார் என்ற குற்றச்சாட்டு புஷ்வாணமாகி விடும்.

ஆகையால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ குடும்பத்தின் மீது உரிய விசாரணைகள் நடத் தப்பட வேண்டும்.

தமிழர் தரப்பில், போர்க்களத்தில் உயிர் நீத்த தன் உடன் பிறப்பை நினைவுகூர்ந்து தீபம் ஏற்றினால் அது குற்றம். மாவீரர் தினத்தில் நடுகல்லுக்கு மாலை அணிவித்தால் அது மகாகுற்றம். மாவீரர் நாளில் கோயில் மணி அடித்தால் அது தெய்வகுற் றம் என்று தமிழர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக் கல் செய்யும் படைத்தரப்பினர், இராணுவப் புரட்சி செய்ய முயன்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த மீது சட்ட நடவடிக்கை எடுக்க-குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யத் தயங்குவது ஏன்?

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து தமிழ் இனப் படுகொலையை அரங்கேற்றிய ஆட்சித் தலைவர் எது செய்தாலும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற கொள்கையிலா மகிந்த மீதான விசாரணை கிடப்பில் போடப்பட்டுள்ளது? என்ற கேள்வி எழுவதில் மிகுந்த நியாயம் உள்ளது.

ஆகையால் குற்றவாளி தமிழரா? சிங்களவரா? என்று நோக்காமல் இழைக்கப்பட்ட குற்றம் யாது என்று அறிந்து சட்ட நடவடிக்கை எடுப்பதே நாட்டில் ஜனநாயகம் உயிர் வாழ்வதற்கு உதவும்.

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கெருடாவில் இந்து தமிழ் கல வன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதா னத்தில் இன்று பிற்பகல் 1.30 மணியள வில் அதிபர் க.உதயரூபன் தலைமை யில் நடைபெறவுள்ளது .

இவ்விளையாட்டு போட்டியில் வட மராட்சி கல்வி வலய கல்வி முகாமை த்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.சிறி கரனும் சிறப்பு விருந்தினர்களாக,

வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், பருத்தித் துறை பிரதேச சபை தவிசாளர் தூ.சஞ் சீவன் ஆகியோர் கலந்து கொள்ளவு ள்ளனர். (செ-4)

# வெளிவிவகார அமைச்சரின் பயணம் வெற்றி-அரசாங்கம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அமெரிக்க விஜயம் வெற்றி யளித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித் துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த 8-ம் திகதி அமெரிக்கா வுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டார்.

அமைச்சரின் இவ்விஜயத்தின் போது இலங்கை மனித உரிமை நிலை மைகள் தொடர்பில் அமெரிக்காவுக்கும், ஐ.நா சபைக்கும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இலங்கை மனித உரிமை விவகா ரங்கள் தொடர்பில் இணைந்து செயற் படத் தயாரில்லை என அமெரிக்கா தெரிவித்து வந்த நிலையில் இலங்கை யின் தற்போதைய நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடை யிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள பல்வேறு முனைப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த முனை ப்புக்கள் வெற்றியளித்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (செ)

# கொழும்பு நுழையும் வாகனங்களுக்கு வரி

(கொழும்பு)

கொழும்புக்குள் உள்நுழையும் அனைத்து வாகனங்களுக்கும் வரி அறவிடப்பட வேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங் கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்ப ட்டதை அடுத்து கொழும்புக்கு வரும் பொதுமக்கள் தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் நிலைக்கு வந்துள்ளனர்.


இதன் காரணமாக, கொழும்பு நக ரில் பெரும்பாலான இடங்களில் வாகன நெரிசல் ஏற்படுவதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன குறிப்பிட்டுள்ளார்.

எனவே, குறிப்பிடத்தக்க வரியை அறவிட வேண்டும் என அவர் நேற் றைய செய்தியாளர் சந்திப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுமக்கள் தனிப்பட்ட வாகன ங்களை பயன்படுத்துவதன் ஊடாக தமது தனியார் பேருந்து துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (செ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆராய்ச்சி, முயற்சி, வெற்றி



கவலை என்பது மனித சக்தியைக் குன்றச் செய்யும் அறிவின் திசை மாற்றமேயாகும். ஒரு நிமிடம் கூட கவலை என்ற பாதைக்கு எண்ண வேகத்தை விட வேண்டாம். துணிவும் விழிப்பும் கொண்டு முயற்சியாக மாற்றிக் கொள்வதே சிந்தனையாளர்களின் கடமை. கவலை என்பது உடல், அறிவு, குடும்பம், ஊர் உலகம் என்ற துறைகள் அனைத்திற்கும் மனிதனுக்கு நஷ்டமே தரும். முயற்சி எவ்வகையிலேயும் லாபமே தரும்.

இயற்கை வளம் என்ற இன்பப் பேரூற்று மக்களின் அறியாமை என்ற அடுக்குப் பாறைகளால் பலதுறைகளில் மறைக்கப்பட்டுள்ளது. அறிவின் விளக்கமான துணிவு என்ற திருகுயந்திரம் கொண்டு வேண்டிய அளவில் அவ்வின்பத்தை அனுபவிக்கலாம். தேவையுணர்வு, சந்தர்ப்பம் என்பனவற்றால் செயல்களும், செயல்களால் உடலுக்கும், அறிவிற்கும் ஒருவிதமான பழக்கமும் ஏற்பட்டு அப்பழக்கத்திலிருந்து விடுபட முடியாமல் எண்ணமும் உடலியக்கமும் நடைபெற்று வருதல் மனிதருக்கு இயல்பு என்றாலும், சிந்தனை, துணிவு, விடாமுயற்சி என்பனவற்றின் மூலம் பழக்கத்தை மாற்றி வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஆராய்ச்சி ! முயற்சி !! வெற்றி !!! என்ற மந்திரத்தை தினந்தோறும் பல தடவை, நேரம் கிடைக்கும் போதெல்லாம் சில நாட்களுக்குச் செபித்துக் கொண்டே வர கவலை என்ற வியாதியும் ஒழியும். வாழ்வில் ஒரு புதிய தெளிவான பாதை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக்கிண்ணம்-2015



# கத்துக்குட்டியான சிம்பாவேயிடம் போராடி வென்றது தென்னாபிரிக்கா

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் லீக் ஆட்டங்கள் நேற்று முன்தினம் தொடங்கி நடைபெற்று வருகின்றது. இன்று 3 ஆவது லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா மற்றும் சிம்பாவே அணிகள் மோதுகின்றன. நியூசிலாந்தில் உள்ள ஹேமில்டன் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் நாணயச் சுழற்றியில் வென்ற சிம்பாவே அணி முதலில் தென்னாபிரிக்கா அணியை துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக் கொண்டது.

இதையடுத்து தென்னாபிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான டி காக்கும், அம்லாவும் களமிறங்கினர். இருவரும் சிம்பாவே அணியின் பந்து வீச்சை சந்திக்க திணறினர். இதனால் 4-வது ஓவரில் 7 ஓட்டங்களில் டி காக அவுட்டானார். 9 ஆவது ஓவரில் அமலவும் 11 ஓட்டங்களில் அவுட்டானார்.

இதையடுத்து ஜோடி சேர்ந்த டுபிளிஸ்சிசும், டி வில்லியம்ஸ்சும் பொறுமையாக விளையாடினர். இதனால் 15 ஆவது ஓவரில் 50 ஓட்டங்களை தொட்டது தென்னாபிரிக்கா. இந்நிலையில் 24 ஓட்டங்கள் எடுத்திருந்த டுபிளிஸ்சிஸ் சிகும்புரா பந்தில் அவுட்டானார்.

இதையடுத்து 5 ஆவது விக்கெட்டுக்கு மில்லர் களமிறங்கினார். சிறிது நேரத்தில் டி வில்லியர்சும் கமுங்கோசி பந்தில் 25 ஓட்டங்களுக்கு அவுட்டானார். லாங் ஆன் திசையில் அவர் அடித்த பந்து எல்லைககோட்டை



நோக்கி பறந்து சென்றது. அந்த பந்தை அற்புதமாக கட்ச் பிடித்த எர்வைன் எல்லைக்கோட்டை தொட்போகிறோம் என்று தெரிந்ததும பந்தை மேலே தூக்கி எறிந்தார். பின்னர் எல்லைக்கோட்டுக்கு வெளியே இருந்து மீண்டும் உள்ளே வந்த அவர், மேலே சென்ற பந்து கீழிறங்கிய போது மறுபடியும் கட்ச் பிடித்தார். இதனால் டி வில்லியர்ஸ் அவுட்டாகி வெளியேறினார்.

அப்போது அணியின் ஓட்டஎண்ணிக்கை 21 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 84 ஓட்டங்களாக இருந்தது. பின்னர் டுமினி, மில்லருடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் முதலில் நிதானமாக விளையாடினாலும் பின்னர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் 31 ஆவது ஓவர் முடிவில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 133 ஆக உயர்ந்தது.

38 ஆவது ஓவரில் மில்லர் தனது அரை சதத்தை கடந்தார். 40 ஆவது ஓவரில் டுமினியும் அரை சதம் அடித்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 40 ஓவர் முடிவில் 193 ஓட்ட எண்ணிக்கை இருந்தது. இந்த ஜோடி கடைசி பத்து ஓவரில் மட்டும் 146 ஓட்டங்களை குவித்தது. 45 ஆவது ஓவரின் இறுதியில் 76 ஓட்டங்களில் இருந்த மில்லர், அடுத்த 6 பந்துகளில் 24 ஓட்டங்கள் சேர்த்து சதத்தை பூர்த்தி செய்தார்.

தொடர்ந்து அதிரடியாக ஆடிய அவர் 92 பந்துகளில் 138 ஓட்டங்களை எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சிறப்பாக விளையாடிய டுமினியும் சதமடித்தார். அவரும் 100 பந்துகளில் 115 ஓட்டங்களை எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் தென்னாபிரிக்க அணி 4






விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 339 ஓட்டங்களை குவித்தது.

வெற்றிக்கு 340 ஓட்டங்கள் தேவை என்ற இலக்குடன் சிம்பாவே களமிறங்கியது.

இலகுவாக வீழ்த்தலாம் என நினைத்த தென்னாபிரிக்காவுக்கு சிம்பாவே கடுமையான நெருக்கடி கொடுத்தது. அவ் அணி 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 277 ஓட்டங்களை பெற்று 62 ஓட்டங்களால் தோல்வி அடைந்து துடுப்பாட்டத்தல் மசகட்சா 80 ஓட்டங்களையும் சிகும்புரா 64 ஓட்டங்களையும் டெய்லர் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இம்ரான் தகிர் 3 விக்கெட்டுகயையும் பிலாண்டா, மோக்கல் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகராக தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர் தெரிவானார். (க)

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

தென்னாபிரிக்கா (50 ஓவர்கள்) 339/4

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| டேவிட் மில்லர் | 138* | 92 |
| ஜே.பி.டுமினி | 115 | 100 |
| ஏ.பி.டி.வில்லியர்ஸ் | 25 | 36 |
| பொப் டுபிளெஸ்சி | 24 | 32 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

சிம்பாவே (48.2 ஓவர்கள்) 277

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| மசகட்சா | 80 | 74 |
| சிகும்புரா | 64 | 82 |
| டெய்லர் | 40 | 40 |
| சாலமன்மியர் | 27 | 25 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

சிம்பாவே பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| சிகும்புரா | 04 | 0 | 30 | 1 |
| பன்யங்கரா | 10 | 2 | 73 | 1 |
| சதாரா | 10 | 1 | 71 | 1 |
| காமுங்கோஜி | 08 | 0 | 34 | 1 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

தென்னாபிரிக்கா பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| இம்ரான்தாஹிர் | 10 | 0 | 36 | 3 |
| பிலாண்டர் | 08 | 0 | 30 | 2 |
| மோர்க்கல் | 8.2 | 1 | 49 | 2 |
| ஸ்டெயின் | 09 | 0 | 64 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விராட் ஹோலி ஜொலிப்பு

# கிரிக்கெட்டின் பரமவைரியான பாகிஸ்தான் அணியை 6வது முறையாகவும் வீழ்த்தி வரலாறு படைத்தது இந்தியா

கிரிக்கெட் உலகமே ஆர்வத்துடன் எதிர் பார்த்துக் காத்திருந்த இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண போட்டி நேற்று நடந்து முடிந்திருக்கிறது.

இப்போட்டியின் முடிவு இந்திய அணிக்கு 76 ஓட்டங்களால் சாதகமாக அமைய, இந்தியர்களுக்கு வெற்றியும், பாகிஸ்தானியர்களுக்கு தோல்வியும் தொடர்கதைகளாகின.

11ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் அவுஸ்திரேலிய - நியூசிலாந்து நாடுகளில் நடைபெறுகின்றன.

இதன் 4-வது போட்டியில் குழுபியைச் சேர்ந்த இந்திய - பாகிஸ்தான் அணிகள் நேற்று பலப் பரீட்சை நடத்தின.

இப்போட்டி அவுஸ்திரேலியாவின் அழகான ஆடுகளமான அடிலெய்ட் ஓவலில் 41 ஆயிரத்து 587 ரசிகர்கள் மத்தியில் நடந்தது.

கிரிக்கெட் உலகின் பரமவைரிகளான இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி என்பதால் ஆடுகளமே சூடுபிடித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணிக்கு ரோகித் - தவான் இணை ஆரம்பம் வழங்கியது.






இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 34 ஓட்டங்களை பகிர்ந்திருந்த போது ரோகித் 15 ஓட்டங்களில் வெளியேறினார்.

பாகிஸ்தான் சார்பில் பந்துவீச்சில் ஜொலித்த சொகைல் கானின் ஆரம்ப கைவரிசை அது.

அதன்பின் ஹோலி களமிறங்கியதன் பின்னர்தான் ஆட்டத்தில் உண்மையான வேகம் பற்றிக் கொண்டது.

அபாரமாக ஆடிய விராட் ஹோலிக்கு, களத்தில் நின்ற தவானும், 4ஆவது வீரராக களமிறங்கிய ரெய்னாவும் கைகொடுக்க இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஹோலி 107, ரெய்னா 74, தவான் 73 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஆரம்பம் முதல் அசத்திய சொகைல் கான் 50 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

301 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை.

தொடக்க வீரராக களமிறங்கிய அனுபவ யூனிஸ் கான் 6 ஓட்டங்களில் வெளியேற, பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே சறுக்கலானது.

அதன்பின்னர் களமிறங்கிய ஹரிஸ் சொஹைல், களத்தில் நின்ற ஆரம்ப வீரர் செஷாட்டுடன் இணைந்து போட்டியின் நிலைமையை உணர்ந்து துடுப்பெடுத்தாடிய போதிலும், பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுக்கள் சீரான ஓட்ட இடைவெளியில் வீழ்ந்து கொண்டிருந்தன.

ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அணியின் நிலைமை 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 103 ஓட்டங்கள் என்றாகியது.


எனினும் தனிநபராக அணித் தலைவர் மிஸ்பா ஆட்டத்தை கையிலெடுத்து போராடிய போதிலும் தமது அணியின் தோல்வியை அவரால் தடுக்க முடியாமல் போனது.

இறுதியில் பாகிஸ்தான் அணி 47 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 76 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் மிஸ்பா 76, செஷாட் 47, ஹரிஸ் செகைல் 36 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் சமி 4, யாதவ், மோகித் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சதமடித்து அசத்திய இந்திய அணியின் விராட் ஹோலி தெரிவானார்.



### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

இந்தியா (50 ஓவர்கள்) 300/7

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ஹோலி | 107 | 126 |
| ரெய்னா | 74 | 56 |
| தவான் | 73 | 76 |
| தோனி | 18 | 13 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

பாகிஸ்தான் (all out; 47 ஓவர்கள்) 224

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| மிஸ்பா | 76 | 84 |
| செசாட் | 73 | 47 |
| சொகைல் | 36 | 48 |
| அப்ரிடி | 22 | 22 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

பாகிஸ்தான் பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| இர்பான் | 10 | 0 | 58 | 0 |
| சொஹைல் கான் | 10 | 0 | 55 | 5 |
| அப்ரிடி | 08 | 0 | 50 | 0 |
| வகாப் றியாஸ் | 10 | 0 | 49 | 1 |
| யசீர் சா | 08 | 0 | 60 | 0 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

இந்தியா பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| யாதவ் | 10 | 0 | 50 | 2 |
| சமி | 09 | 1 | 35 | 4 |
| மோகித் சர்மா | 09 | 1 | 35 | 2 |
| அஸ்வின் | 08 | 3 | 41 | 1 |
| ஜடேஜா | 10 | 0 | 56 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்-த.தே.கூ

(கொழும்பு)

இலங்கையில் மீள்குடியேற்றம், நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல விடயங்களில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சூழலிலேயே தமிழ்க் கூட்டமைப்பின் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவது குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும் வேளையில், திரும்புவர்கள் மீள்குடியேறுவதற்கான நிலங்கள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

உள்ளூர் மக்களின் சில நிலங்கள் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது, இந்தியாவிலிருந்து வருபவர்களின் மீள்குடியேற்றம் எந்த அளவுக்கு சாத்தியமாகும் எனவும் அவர் கேள்வி எழுபபுகிறார்.

இராணுவத்தின் பிடியில் இருக்கும் நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியேறுவதற்கு இந்தியா அழுத்தம் கொடுத்தால் அது மிகவும் வரவேற்கத் தக்கதாக அமையும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறினார். (செ)

## ஆணைக்குழு ஆலோசகர்களு...

ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவர்களில் எவரும் காணாமல் போனோர் தொடர்பான வாக்குமூல அமர்வுகள் எவற்றிலும் பங்கேற்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த இருவரும் சுயமாகவே முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்கும் கடந்த டிசம்பர் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் விஜயம் செய்தனர்.

இதன்போது அவர்களின் தங்குமிடங்கள் மற்றும் உணவுகளுக்காக மாத்திரம் 598,336 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இதில், சேர் டெஸ்மண்ட் டி சில்வா 79 மில்லியன் ரூபாய்களையும் ரொட்னி டிக்சன் 5, 727, 522.84 ரூபாய்களையும், டேவிட் எம்க்ரேன் 07, 814, 261.50 ரூபாய்களையும் பெற்றுள்ளனர்.

இதனை தவிர, ஆலோசனைக் குழு வில் அங்கம் வகிக்காத பி பி மயில்வாகனம் என்பவருக்கு 20, 705, 542 ரூபாய்களும், மேஜர் ஜெனரல் ஜே டி ஹோம்ஸ்க்கு 4,3 32, 910.50 ரூபாய்களும், மனித உரிமைகள் நிறுவனங்களின் குழுமத்துக்கு 3, 735, 000 ரூபாய களும் செலுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில் சேர் ஜியோப்ரி நைஸ்க்கும் அவரின் பாரியாருக்கும் 18, 060, 558.98 ரூபாய்கள் செலுத்தப்பட்டன.

வெறுமனே நாட்டுக்கு எவ்வித பயன்களும் இன்றி, இந்தளவு பணம் செலவிடப்பட்டதாக இணைய ஊடகங்கள் விமர்சித்துள்ளன. (செ)

## இந்தியாவில் மைத்திரி...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர், நேற்று பிற்பகல் 1.55 மணி அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இந்தியா நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் இலங்கை விமான நிலையத்திற்குச் சொந்தமான பயணிகள் விமானத்திலேயே புறப்பட்டுச் சென்றதாக தெரியவந்துள்ளது.

இந்த விஜயத்தில் சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர மற்றும் பாதுகாப்பு குழுவினர் உள்ளிட்ட 17 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்திரகாந்தி சர்வதேச விமான நிலையத்தை நேற்று மாலை சென்றடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய மத்திய இணையமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்கா மற்றும் உயர் அதிகாரிகள் விமான நிலையத்தில் ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் வரவேற்றனர்.

ஜனாதிபதியையும் பாரியாரையும் தங்கும் ஹோட்டலில் இலங்கை சிறுவர்கள் இருவர் வரவேற்றனர்.

ஜனாதிபதி எதிர்வரும் 18-ம் திகதி வரை இந்தியாவில் தங்கியிருந்து அரசியல் தலைவர்களுடன் சந்திப்பினை மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி இன்று இந்திய ஜனாதிபதி மாளிகையில் வரவேற்கப்படுவதைத் தொடர்ந்து அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின் போது இருநாட்டு நட்புறவுகள், தொழில் வர்த்தக உடனபாடு குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் நீண்ட காலமாக நீடித்து வரும் தமிழக மீனவர்கள் பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் தாய்நாட்டிற்கு திருப்பியனுப்புவது குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியில் இந்திய அரசாங்கத்தின் தலையீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகள், இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்களை மீள்குடியமர்த்தல், அதிக அதிகாரம் வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## நல்லிண...

பதியின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி சிறில் ரமபோச இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக விஜயம் மேற்கொள்ளவுள்ள சிறில் ரமபோசவின் விஜயத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே தாங்கள் பெப்ரவரி 24-ம் திகதி இலங்கை செல்லவுள்ளதாகவும் இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென்னாபிரிக்காவன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உலகில் எந்த நாடும் அதே பாணியில் பயன்படுத்த முடியாது, இலங்கை தனது உள்நாட்டு இனப்பிரச் சினைக்கு உள்நாட்டில் தீர்வொன்றை காண முயல வேண்டும் என இலங்கைக்கான தென்னாபிரிக்க தூதுவர் ஜெவ் டொயிட்ஜ் தெரிவித்துள்ளார். இலங்கை உள்நாட்டு தீர்வொன்றை காணும் முயற்சிகளுக்கு உதவப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ)

## அகதிகளை மீளக்குடியமர்த்...

எடுக்கக் கூடிய வகையிலும் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தநிலையில், இந்தியாவில் இருக்கின்ற இடம்பெயர்ந்துள்ள தமிழர்களை இங்கே வடக்கில் குடியமரச் செய்வதுடன், அகதிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலரையும் வடக்கின் குடிசன எணணிக்கையுடன் சேர்க்கும் முயற்சி இடம்பெறுகின்றது.

அது மாத்திரமன்றி அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நாடுகளின் அதிகாரிகள் சுதந்திரமாக எல்லா பிரதேசங்களுக்கும் சென்று தமக்கான தகவல்களை பெறும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது எனவும் பியசிறி விஜேநாயக்க தெரிவித்தார்.

இந்தநிலையில், கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டத்தை அரசாங்கத்தால் நிறுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய அமெரிக்க ராச்சியமே இலங்கையின் போட் சிற்றி செயற்றிட்டத்திற்கு முழு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மீது பற்று கொண்ட அனைவரும் இந்த விடயத்தில் எதிர்ப்பு போக்கையே கடைபிடிக்கின்றனர்.

பூகோள அரசியல் கட்டமைப்பில் ஆசிய தளத்தை அடிமைப்படுத்தும் செயற்பாட்டில் பெண்டகன் ஈடுபட்டுள்ளது.

அதேவேளை, இந்திய முதலீட்டாளர்களை விட அமெரிக்க முதலீடுகளுக்கு நரேந்திர மோடி அரசாங்கம் அதிக இடமளிப்பதாக முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க குறிப்பிட்டார்.

இதன் ஒரு கட்டமாகவே மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து கவிழ்க்கும் செயற்பாட்டிலும் மேற்கத்தைய நாடுகள் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பிறிதொரு நாட்டின் அழுத்தம் காரணமாக போட் சிற்றி செயற்றிட்டத்திற்கு தாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

குறித்த செயற்றிட்டத்தின் ஊடாக ஏற்படும் இலாப நட்டங்களை கருத்தில் கொண்டே அதன் செயற்பாடு தொடர்பாக தீர்மானிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (செ)

## சுயாதீன...

கீழ் சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவை நியமிப்பது தொடர்பில் இணங்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி இந்த அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## வெள்ளை...

றுள்ளது.

பின்னர் வானுள் இருந்த சில இளைஞர்கள் அப்பெண்ணை வானுள் இழுத்து ஏற்றியுள்ளனர்.

பலர் முன்னிலையில் சினிமாப் பாணியில் பெண்ணை கடத்தியவர்கள் கண்மூடித் திறப்பதற்குள் அங்கிருந்து தலைமறை வாகியுள்ளனர். இதனால் யாழ் நகரில் நேற்றையதினம் பதற்றம் காணப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் பெண்ணின் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் பொலிஸார் கூறுகையில், குறித்த பெண் முன்னர் தனது இடமான பூநகரியைச் சேர்ந்த இளைஞரொருவரினை காதலித்து வந்துள்ளார். இந்நிலையில் குறித்த இளைஞன் வேலையின் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளார்.

இதற்கிடையில் இருவரினதும் காதலில் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் நாடுதிரும்பிய காதலன் காதலியை கடத்தி சென்றிருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-4)

## மகிந்த மீண்...

யாங்கள் தொடர்பில் பெரும் பிரச்சினைகள் இருக்கின்றன. எந்தவகையிலும் மகிந்தவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு கிடைக்காது.

இது தோல்வியடையும் வேலை, இறுதியில் மகிந்த ராஜபக்ஷ வெட்கத்திற்கு உள்ளாகும் நிலைமையே ஏற்படும்.

தனது ஆலோசனையின்றி விமல் வீரவன்ஸ போன்றவர்கள் செய்யும் வேலையாக மகிந்த ராஜபக்ஷ இதனை காண்பிக்க முயற்சித்து வருகிறார்,

எதுவும் தெரியாதவர் எப்போதும் அவர் நடிக்கவே செய்தார். தற்போது அதற்கு இடமில்லை. மகிந்தவின் காலம் முடிந்து விட்டது.

மகிந்தவுக்கு 58 லட்சம் வாக்குகள் இல்லை. அது முடிவடைந்த தேர்தலின் வாக்கு எண்ணிக்கை. மைத்திரிபால ஆட்சிக்கு வந்தால், புலிகள் வந்து விடுவார்கள் என்று பிரசாரம் செய்தமைக்காக அந்த வாக்குகள் கிடைத்தன.

மகிந்தவுக்கு தற்போது சுமார் 70 வயதாகிறது. அவர் தற்போது ஓய்வுபெற வேண்டும். அதற்கான வயதை அவர் அடைந்து விட்டார். ஆட்சியில் இருந்த காலத்தில் செய்தது போதும். ஜனாதிபதியாக தோல்வியடைந்த ஒரே ஜனாதிபதி மகிந்த மாத்திரமே.

வரையறையை தாண்டி பதவியில் இருக்க வேண்டாம் என்று அந்த தோல்வியில் அவர் மாத்திரம் அல்ல அரசியல் வாதிகளும் சிறந்த பாடத்தை கற்றுள்ளனர்.

இதனையும் மீறி அவர் மீண்டும் வருவாரேயானால் இதனை விட சிறந்த பாடத்தை கற்றுக் கொள்ள முடியும் எனவும் சஜீவ சேனசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ)

Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-121)

பதவி வெற்றிடங்கள்
Optimo Group SriLanka
நிறுவனம் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் 06 புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்தவர்கள் தேவைப்படுகின்றனர்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டத்தினர் விரும்பத்தக்கது.
- வயதெல்லை 18-28
- தங்குமிட வசதிகள் உண்டு
- சம்பளம் 15, 000 /- - 18,000 /-
(C-133)
தொடர்புகளுக்கு : 0773366453, 0777981471, 0214545634

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்..
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 895 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 320 2973 (C-122)
No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
No.181, 1st Floor, Main Street, Nelliady.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org